ISSN: 2582–5518




# புதுகை வரலாறு நாளிதழ்

WWW.VARALARUU.COM VARALARUU PUDUGAIVARALARU VARALARUU 7502051351




ஞாயிறு ❖ ஜூலை. 16, 2023 புதுக்கோட்டை 4 பக்கம் ❖ வரலாறு 8 ❖ இதழ் 282 ❖ ரூ.10

அனைத்து மாவட்டங்களும், அனைத்து வளர்ச்சியையும் எட்டுவதுதான் அரசின் இலக்கு

# விருப்பம்

## 2026 ஆம் ஆண்டுக்குள் தென் மாவட்டத்தைச் சேர்ந்த இளைஞர்கள் 6000 பேருக்கு வேலை வாய்ப்பு கிடைக்கும் பின்னங்கிள் நிறுவனத்தை திறந்து வைத்த முதல்வர் மு.க.ஸ்டாலின் உறுதி

**சென்னை , ஜூலை.16– அனைத்து மாவட்டங்களும், அனைத்து வளர்ச்சியையும் எட்டுவதுதான் அரசின் இலக்கு என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.**



மதுரை,வடபழஞ்சியில் பின்னக்கிள் நிறுவனத்தின் தகவல் தொழில்நுட்ப கட்டிடத்தை முதல்வர் மு.க.ஸ்டாலின் காணொலிக் காட்சி வாயிலாக நேற்று திறந்து வைத்தார். மதுரை வடபழஞ்சியில் எல்கோசெஸ்ஸில் உள்ள பின்னக்கிள்இன்பொடெக் சொலுயுசன்ஸ் நிறுவனத்திற்கு தமிழ்நாடு மின்னணு நிறுவனம் 34.09 ஏக்கர் நிலத்தை ஏற்கனவே ஒதுக்கீடு செய்தது. இதனையடுத்து, பின்னக்கிள்இன்பொடெக் சொல்யூஷன்ஸ் நிறுவனம் முதற்கட்டமாக 1,80,000 சதுர அடி பரப்பளவில் ரூ.120 கோடி முதலீட்டில் கட்டுமானப் பணிகளை முடித்து 950 பணியாளர்களுக்கு வேலைவாய்ப்பினை அளித்துள்ளது.

இந்த அதிநவீன தகவல் தொழில்நுட்ப கட்டிடம், மதுரை மற்றும் அதை சுற்றியுள்ள பகுதிகளைச் சேர்ந்த திறமையான இளைஞர்களுக்கு 2026 ஆம் ஆண்டுக்குள் சுமார் 6,000 நபர்களுக்கு வேலைவாய்ப்பை அளிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. இந்நிலையில், பின்னக்கிள் நிறுவனத்தின் தகவல் தொழில்நுட்ப கட்டிடத்தை திறந்து வைத்துப் பேசிய முதல்வர் மு.க.ஸ்டாலின், "பின்னக்கிள் நிறுவனத்தின் மிகப்பெரிய Global Engineering Centre of Excellence-யை மதுரை, வடபழஞ்சியில் திறந்து வைப்பதில் பெருமையடைகிறேன். தமிழ்நாடு மின்னணு நிறுவனம் மதுரை வடபழஞ்சியில் 245.17 ஏக்கர் பரப்பளவில் தகவல் தொழில்நுட்பப் பூங்காவை அமைத்துள்ளது. இதில் 120 கோடி ரூபாய் முதலீட்டில் சுமார் 1,80,000 சதுர அடி பரப்பளவில் 950 பணியாளர்களுக்கு பணிவாய்ப்பினை அளித்து, உலகத்தரம் வாய்ந்த தகவல் தொழில்நுட்ப மையத்தை பின்னக்கிள் நிறுவனம் அமைத்துள்ளது. இது இந்தியாவில் அமையும் நான்காவது Global Delivery Centre ஆகும்.

3டி மாடலிங், கட்டட மேலாண்மை, MEP டிசைன், Value Engineering, Scan to BIM உள்ளிட்ட பல சேவைகளை அளிப்பதாக இது அமைந்துள்ளது. இத்தகைய தனித்துவம் வாய்ந்த சிறப்பம்சங்களைக் கொண்ட இந்த பின்னக்கிள் நிறுவனத்தின் மையம் மூலமாக 6,000 பேருக்கு, குறிப்பாக தென்மாவட்ட இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு கிடைக்க இருப்பது எனக்கு மேலும் மகிழ்ச்சி அளிக்கிறது. நமது திராவிட மாடல் அரசு பொறுப்பேற்ற பின், பொருளாதாரத்தை வளர்க்கவும், தமிழக இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பை ஏற்படுத்தித் தரவும், தொழில்துறையில் அதிக அக்கறையும், கவனமும் செலுத்தி வருவதை நீங்கள் அனைவரும் அறிவீர்கள். நம்முடைய இலக்கு என்பது தென் மாவட்டங்களின் தொழில் வளர்ச்சியை பெருக்கி, அனைத்து மாவட்டங்களும், அனைத்து வளர்ச்சியையும் அடைந்தது என்ற நிலையை எட்டுவதுதான். எங்களுடைய இந்த இலக்கை அடைய உதவிடும் வகையில் பின்னக்கிள் போன்ற நிறுவனங்கள் இன்னும் பிற தென் மாவட்டங்களில் தொழில் முதலீடுகளை மேற்கொள்ள வேண்டும் என்பதை என்னுடைய வேண்டுகோளாக இந்த தருணத்தில் வைக்கிறேன்.

ஐடி என்றாலே கருணாநிதி தான். அந்த அளவுக்கு தகவல் தொழில்நுட்ப துறை வளர்ச்சிக்காக எண்ணற்ற திட்டங்களை நிறைவேற்றிக் காட்டியவர் கருணாநிதி. இந்தியாவிலேயே முதன்முதலாக 1997ம் ஆண்டே தகவல் தொழில்நுட்ப கொள்கையை உருவாக்கி, தமிழகத்தின் ஐடி புரட்சிக்கு வித்திட்டவர் கருணாநிதி. சென்னையில் டைடல் பூங்காவை அமைத்து இன்று ராஜீவ் காந்தி சாலை என அழைக்கப்படும் OMR சாலையை தகவல் தொழில்நுட்ப தாழ்வாரமாக வழிவகுத்தார். எதிர்காலம் என்பது டிஜிட்டல் காலம் என்பதை முன்கூட்டியே உணர்ந்து, தமிழகத்திலுள்ள மாணவர்கள் கணினி பயில்வதை ஊக்குவித்தார். அவர்கள் மென்பொருள் துறையில் சிறந்து விளங்குவதற்குக் காரணமானார்.

இன்று தமிழகத்தில் வீதிதோறும் பொறியியல் பட்டதாரிகள் இருக்கிறார்கள் என்றால் அதற்கு அடித்தளமிட்டவர் தான் நவீன தமிழகத்தின் சிற்பியான கருணாநிதி. அத்தகைய தலைவர் கருணாநிதி நூற்றாண்டில் மதுரையில் அமையும் இந்த பின்னக்கிள் நிறுவன மையம் தென் தமிழகத்தின் வளர்ச்சிக்கு உதவியாக இருக்கும் என நம்புகிறேன். இதுபோன்ற வளர்ச்சியை விரைவுபடுத்தி அதன் பயனை எல்லாருக்கும் கொண்டு சேர்ப்பதை நமது தகவல் தொழில்நுட்பத்துறை அமைச்சர் முனைவர் பழனிவேல் தியாகராஜன் மெய்ப்பித்து காட்டுவார் என நான் நம்புகிறேன். இந்த சிறப்பான முன்னெடுப்பை நிகழ்த்தி காட்டியிருக்கும் பின்னக்கிள் நிறுவனத்தின் உயர் அலுவலர்கள், ஊழியர்கள் என அனைவருக்கும் வாழ்த்துகள்" என தெரிவித்தார்.



புதுக்கோட்டை கம்பன் கழகத்தின் 48 ஆம் ஆண்டு கம்பன் பெருவிழா புதுக்கோட்டை நகர்மன்ற வளாகத்தில் ஜூலை 14ஆம் தேதி வெள்ளிக்கிழமை தொடங்கியது. 2ம் நாள் விழாவிற்கு கம்பன் கழகத் தலைவர் ராமச்சந்திரன், வரவேற்பு உரையாற்றினார். சென்னை உயர்நீதிமன்ற நீதிபதி அரங்க.. மகாதேவன் தலைமை வகித்தார். நீதிபதி சுரேஷ்குமார் முன்னிலை வகித்தார். கம்பவாதிரி இலங்கை ஜெயராஜுக்கு கம்பன் மாமணி விருது வழங்கப்பட்டது. இலக்கிய மாமணி விருது புதுகை தர்மராஜனுக்கும், கம்பன் பாரிவள்ளல் விருதுகள் புவனேஸ்வரி தங்க மாளிகை சோம நடராஜன், முத்து மீனாட்சி மருத்துவமனை டாக்டர் பெரியசாமி உள்ளிட்டோர்ருக்கு வழங்கப்பட்டது.

## புதுக்கோட்டையில் ரோட்டரி சங்கங்கள் இணைந்து நடத்திய சிறப்புக் குழந்தைகள் கலைத் திருவிழா

**புதுக்கோட்டை , ஜூலை.16–**

புதுக்கோட்டை வருவாய் மாவட்ட அனைத்து ரோட்டரி சங்கங்கள் இணைந்து நடத்திய சிறப்பு குழந்தைகளுக்கான கலைத் திருவிழா ஸ்ரீ வெங்கடேஸ்வரா மெட்ரிக். மேல்நிலைப்பள்ளியில் நடைபெற்றது. மகிழ்ந்திரு மகிழ்வித்திரு என்ற தலைப்பில் நடைபெற்ற இந்த விழாவில் மாவட்ட அளவிலிருந்து ஏராளமான சிறப்புக் குழந்தைகள் தங்கள் பெற்றோர்களுடன் கலந்து கொண்டனர். இந்த விழாவிற்கு மாவட்ட துணைச் செயலாளர் சிறப்புத் திட்டங்கள் கருணாகரன் தலைமையேற்றார். சிறப்பு விருந்தினர்களாக சட்ட மன்ற உறுப்பினர் டாக்டர் முத்துராஜா, மாவட்ட ஆளுனர் ஆனந்த ஜோதி, மாவட்ட செயலாளர் ஸ்பீக்கர் பேங்க். கவிஞர் தங்கம் மூர்த்தி ஆகியோர் சிறப்பு விருந்தனராக கலந்து கொண்டு நிகழ்ச்சியை தொடக்கி வைத்தனர்.

கௌரவ விருந்தினர்களாக மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலர் உலகநாதன், ஆதிகாலத்து அலங்கார மாளிகை அருண், சுபபாரதி லியோ பெலிக்ஸ் லூயிஸ் வீரமணிகண்டன் சுந்தரம் பேக்கரி சிறப்பு அழைப்பாளர்கள் சர்வதேச



செஸ் வீரர் ஏ.அங்கப்பன் ஆகியோர் கலந்து கொண்டனர். விழாவில் சிறப்பு குழந்தைகளுக்கான விளையாட்டுகள் நடத்தப்பட்டது. சிறப்பு விருந்தினராக கலந்து கொண்ட ஆனந்த ஜோதி பேசும்போது " சிறப்பு குழந்தைகளுக்கான விழாவை தமிழகம் முழுவதும் நடத்தி வருகின்றோம். எல்லா இடங்களிலும் சிறப்புக் குழந்தைகளும் அவர்களின் பெற்றோர்களும் ஏராளமாக கலந்து கொள்வது வரவேற்கத்தக்கது. இதுமாதிரி வெளியே அவர்களை அழைத்து வந்து விழாக்களில் கலந்து கொள்ளச் செய்யும்போது குழந்தைகளும் பெற்றோர்களும் வித்தியாசமான அனுபவங்களை பெறுகின்றனர். என்று குறிப்பிட்டார்.

கவிஞர் தங்கம் மூர்த்தி பேசும் போது " சிறப்புக் குழந்தைகளான இவர்கள் தான் கடவுளின் குழந்தைகள். அவர்களை காணும்போது நமக்கு நெகிழ்ச்சியில் கண்கள் பணிக்கின்றது. கள்ளம்கபடமில்லமல் அவர்களை நம்மை அழைப்பதும், நம்மை தொட்டுப்பார்க்க ஆசைப்படுவதும், நம்மோடு கை குலுக்குவதும் மிகவும் நெகிழ்ச்சியான தருணங்கள். இதுமாதிரி மாவட்டம் முழுவதும் இவர்களை அழைத்து விழா நடத்திட வேண்டும் என்று குறிப்பிட்டார். சிறப்பு குழந்தைகளுக்கு விளையாட்டுகளும், மேஜிக் நிகழ்ச்சியும் அவர்கள் மனம் மகிழும் வண்ணம் நடத்தப்பட்டது. சிறப்பு குழந்தைகளுக்குப் பிடித்த பாப்கான், பஞ்சுமிட்டாய் போன்ற திண்பண்டங்களும் வழங்கப்பட்டன. முன்னதாக ரோட்டரி பிரேயர் மண்டல் ஒருங்கிணைப்பளர் ஆரோக்கியசாமி வாசிக்க மண்டல ஒருங்கிணைப்பளர் பீர்சேக் நன்றி கூறினார். நிகழ்ச்சி ஏற்பாடுகளை அருணாச்சலம் தலைமையில் துணை ஆளுநர்கள் கவிதா, கதிரேசன் மற்றும் புதுக்கோட்டை மாவட்ட அனைத்து ரோட்டரி சங்க தலைவர்களும் சிறப்பாக செய்தனர். விழாவில் சிறப்புத்திட்ட மாவட்ட செயலாளர் முரளி, மாவட்ட செயலாளர் சிறப்பு குழந்தைகள் திட்டம் லோகநாதன், மற்றும் ஏராளமான ரோட்டரி குழும உறுப்பினர்கள் கலந்து கொண்டு சிறப்புக் குழந்தைகளை வாழ்த்தினர்.



புதுக்கோட்டை ஒன்றியம், மேட்டுப்பட்டி ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளியில், மாணவ, மாணவிகளின் கற்றல், கற்பித்தல் திறன்களை, மாவட்ட ஆட்சித்தலைவர் மெர்சி ரம்யா, நேற்று நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

## அறந்தாங்கி வீரமாகாளியம்மன் திருக்கோயில் பூச்சொரிதல் விழா ஐந்து ஆண்டுகளுக்கு பிறகு விமர்சையாக நடைபெற்றது

**அறந்தாங்கி ஜூலை 16– புதுக்கோட்டை மாவட்டம் அறந்தாங்கியில் பிரசித்தி பெற்ற ஸ்ரீ வீரமாகாளியம்மன் திருக்கோயில் அமைந்துள்ளது. இத்திருக்கோயிலில் ஆண்டுதோறும் நடைபெறும் ஆடிப்பெருந்திருவிழா பிரசித்தி பெற்றது.**



கடந்த ஐந்து ஆண்டுகளாக கோவில் புனரமைப்பு பணிகள் நடைபெற்று வந்த நிலையில் இந்த ஆண்டு கும்பாபிஷேகம் நடைபெற்று ஆடிப் பெருந்திருவிழா நடப்பாண்டு கொண்டாடப்பட வேண்டும் என அனைத்து மண்டாகப்படி தாரர்களால் முடிவு செய்யப்பட்டது.

அதன்படி நடப்பாண்டு பூச்சொரிதல் விழா நடைபெற்றது . முன்னதாக இந்து சமய அறநிலையத்துறை சார்பில் வீரமாகாளி அம்மனுக்கு பூக்கள் சாற்றி சிறப்பு பூஜைகள் செய்யப்பட்டது. பின்னர் அறந்தாங்கி வர்த்தக சங்கம், உள்ளிட்ட 30 மண்டகப்படிதாரர்கள் பூச்சொரிதல் விழாவில் பல்வேறு வகையான மலர்களைக் கொண்டு அலங்கரிக்கப்பட்ட தாம்பூல தட்டுடன் தலையில் சுமந்து வந்து நேர்த்திக்கடன் செலுத்தினர்.

தொடர்ந்து பூச்சொரிதல் விழாவில் அறந்தாங்கி வருவாய்த்துறை, ஊரக வளர்ச்சித் துறை, மின்சாரத்துறை நகராட்சி நிர்வாகத்துறை, நெடுஞ்சாலைத்துறை, உள்ளிட்ட பல்வேறு துறை அதிகாரிகள் கலந்து கொண்டு பூத்தட்டுகளை சுமந்து அம்மனுக்கு சாத்தினர். முன்னதாக அறந்தாங்கி வர்த்தக சங்க அலுவலக வரவேற்பு நிகழ்ச்சியில் கலந்துகொண்ட வணிகர் சங்கங்களின் மாநில பேரவை தலைவர் தலைவர் விக்கிரமராஜா யானை மூலம் வரவேற்பளிக்கப்பட்டு மாலை அணிவிக்கப்பட்டது. பின்னர் வணிகர்களோடு பூத்தட்டுகளை சுமந்து திறந்த வேனில் ஊர்வலமாக வீரமாகாளியம்மன் கோவிலுக்கு எடுத்து சென்றார்.

நிகழ்ச்சியில் மாநில பொதுச்செயலாளர் கோவிந்தராஜீலு திருச்சி நிர்வாகி தமிழ்ச்செல்வன், ஸ்ரீதர் வர்த்தக சங்க தலைவர் காமராஜ் செயலாளர் தவசுமணி பொருளாளர் சேக் அப்துல்லா முன்னாள் வர்த்தக சங்க தலைவர் ராஜ்குமார், ஆதி.ரவீந்திரகுமார், சந்திரமோகன் உள்ளிட்ட நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

அறந்தாங்கியில் பிரசித்தி பெற்ற வீரமாகாளியம்மன் திருக்கோயில் வடக்கு திசை பார்த்து அமர்ந்து அருள்பாளிக்கும் அம்மன் என்பதால் திருமணவரன் கிடைக்காத ஆண்,பெண் இருவருக்கும் இங்கு பொட்டு கட்டி அம்மன் நெற்றியில் சாற்றி வழிபட்டால் ஒரு மாத காலத்திற்குள் திருமணம் நடைபெறும் என்பது ஐதீகம் ஐந்து ஆண்டுகளுக்கு பிறகு நடைபெறும் ஆடிப்பெருந்திருவிழா என்பதால் தமிழகத்தின் பல்வேறு மாவட்டங்களில் இருந்து 50 ஆயிரத்துக்கும் மேற்பட்ட பக்தர்கள் வருகை தந்து அம்மனை வழிபட்டு சென்றனர்.

## அரியலூர் நகரில் சாலை ஆக்ரமிப்புகளை அகற்றி விரிவுபடுத்த தேமுதிக கோரிக்கை

**அரியலூர், ஜூலை.16– அரியலூர் நகரில், சாலை ஆக்ரமிப்புகளை அகற்றி, விரிவுபடுத்த நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என, தேமுதிக நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டத்தில், தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.**

தேசிய முற்போக்கு திராவிட கழகத்தின், அரியலூர் மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர், கட்சி நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது. அரியலூர் கருணாஸ் ஹோட்டல் கூட்ட அரங்கத்தில் நடைபெற்ற இக்கூட்டத்துக்கு, கட்சியின் மாவட்ட அவைத் தலைவர் கே. எஸ். வேல்முருகன் தலைமை வகித்தார். அரியலூர் நகரச் செயலாளர் தாமஸ் ஏசுதாஸ் வரவேற்று பேசினார், தேமுதிக மாவட்ட செயலாளர் ராம ஜெயவேல் ஆலோசனைகள் வழங்கி, சிறப்புரையாற்றிய இக்கூட்டத்தில்,நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் வருமாறு:

வருகிற ஆகஸ்ட் 25ஆம் தேதி, தேமுதிக நிறுவனர் விஜயகாந்த் பிறந்தநாளை, வறுமை ஒழிப்பு தினமாக, அரியலூர் மாவட்டத்திலுள்ள, 201 ஊராட்சிகளிலும், ஆலயங்களில் சிறப்பு வழிபாடு நடத்தி, பள்ளி மாணவ, மாணவிகளுக்கு, உதவிகளை வழங்கி கொண்டாடுவதுடன், கட்சி வளர்ச்சிக்காக, அதிக உறுப்பினர்களை சேர்த்து, கிராமங்கள் தோறும், ஏழை, எளிய மக்களுக்கு, நலத்திட்ட உதவிகளை வழங்குவது.

அரியலூரில் உள்ள தற்காலிக பேருந்து நிலையத்திற்கு, அனைத்து பேருந்துகளும் வந்து செல்ல நடவடிக்கை எடுப்பதுடன், மழைக்காலங்களில் அப்பேருந்து நிலையத்தில், சேரும் சகதியுமாக உள்ள நிலையை மாற்றி, தார் சாலை அமைப்பதுடன், பயணிகளுக்கு நல்ல குடிநீர் வசதி செய்துதர, நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.



நாளுக்கு நாள் உயர்ந்து வரும் அத்தியாவசிய பொருட்களின் விலை உயர்வை கட்டுப்படுத்த, தமிழக அரசு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். அரியலூர் நகரில், அண்ணா சிலை முதல் ரயில்வே கேட் வரை உள்ள, சாலையின் இருபுறமும், ஆக்கிரமிப்புகளை அகற்றி, சாலையை விரிவு படுத்த நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். மேலும் நகரில் உள்ள பெரும்பாலான இடங்கள் இருட்டாகவே உள்ளது. அங்குள்ள மின் கம்பங்களில் மின்விளக்குகளை பொறுத்த, நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

கூட்டத்தில் தேமுதிக மாவட்ட நிர்வாகிகள், ராஜா பன்னீர்செல்வம், சக்திவேல், தெய்வசிகாமணி, சக்தி பாண்டி, ஆனந்தன், ஜேக்கப், கருப்பையா, ஒன்றிய நிர்வாகிகள் சசிகுமார், ராஜ்குமார், ஜெகதீசன், அறிவழகன், முருகானந்தம், செந்தில்குமார், குமாரதேவன், வேல்முருகன், செல்வராஜ், ராஜேந்திரன், நகர, பேரூர், நிர்வாகிகள் ஜெயங்கொண்டம் சின்ன பாண்டு, உடையார் பாளையம் முனியசாமி, வரதராஜன் பேட்டை ஆரோக்கியசாமி, அரியலூர் நகர, ஒன்றிய நிர்வாகிகள் மதி, ரமேஷ், ரவி, ராஜீவ் காந்தி, செந்தில்குமார், சாமிதுரை, மற்றும் சார்பு அணி நிர்வாகிகள் உள்பட, பலர் கலந்து கொண்டனர்.

முடிவில் அரியலூர் வடக்கு ஒன்றியத் தலைவர் கே.எஸ். ரவி நன்றி கூறினார்.

# இன்று

16-7-2023

நீர்கடுப்பு தீர்க்க வெங்காயம் பச்சையாக சாப்பிடலாம்
சக வருடம் 1945 ஆஷாடம் 25

சோபகிருது ஆனி 31 | JUL - SUN ஞாயிறு | துல்ஹிஜ்ஜா 27 | தேய்பிறை 197 / 168

சதுர்த்தசி 42.41 (மா. 11.04) திருவாதிரை 54.50 (கா. 03.56) தியாஜ் 13.05 அகஸ் 31.19 சித்த. நாகப்பட்டினம் நீலாயதாட்சியம்மன் கமல வாகனம் மாலை வஸந்தனுக்கு எழுந்தருளல். திருவாடானை சிநேகவல்லியம்மன் புறப்பாடு.

| | நல்லநேரம் | கௌ.ந.நே. | இராகு | குளிகை | எமகண்டம் |
|---|---|---|---|---|---|
| காலை | 7.45-8.45 | 1.45-2.45 | 04.30 | 03.00 | 12.00 |
| மாலை | 3.15-4.15 | 1.30-2.30 | 06.00 | 04.30 | 01.30 |

சூலம் : மேற்கு; பரிகாரம் : வெல்லம் — மிதுன லக்னம் இருப்பு நா. 0 வி. 10 — சந்திராஷ்டமம் அனுஷம்
கரணம் : 10.30-12 — சூரிய உதயம் : 6.00
பொறுத்தார் பூமி ஆள்வார்

இராசிபலன்
மேஷம் - முயற்சி
ரிஷபம் - சுகவீனம்
மிதுனம் - புகழ்
கடகம் - ஓய்வு
சிம்மம் - சாதனை
கன்னி - அலைச்சல்
துலாம் - வாழ்வு
விருச்சி - உறுதி
தனுசு - தொல்லை
மகரம் - நிறைவு
கும்பம் - யோகம்
மீனம் - எதிர்ப்பு

## சிந்திப்போம்.... செயல்படுவோம்







# தக்காளி விற்று ஒரே மாதத்தில் கோடீஸ்வரரான மகாராஷ்டிர விவசாயி

புனே , ஜூலை.16-

தக்காளி விலை விண்ணை முட்டும் அளவுக்கு அதிகரித்து வரும் சூழலில் மகாராஷ்டிராவில் தக்காளி விற்று ஒரே மாதத்தில் கோடீஸ்வரராகியுள்ளார் ஒரு விவசாயி.



புனே மாவட்டத்தைச் சேர்ந்தவர் விவசாயி துக்காராம் பாகோஜி கயாகர். அவருக்குச் சொந்தமாக 18 ஏக்கர் விவசாய நிலம் இருக்கிறது. இதில் 12 ஏக்கரில் அவர் தக்காளி விவசாயம் செய்து வருகிறார். அவருடன் அவரது மகன் ஈஸ்வர் கயாகர், மருமகள் சோனாலி ஆகியோர் விவசாயம் செய்து வருகின்றனர்.

இந்நிலையில் திடீரென தக்காளி விலை விண்ணை முட்டும் அளவுக்கு உயர்ந்துவிட துக்காராமுக்கு ஜாக்பாட் அடித்தது. அவர் கடந்த ஒரு மாதத்தில் மட்டும் 13 ஆயிரம் பெட்டிகள் தக்காளி அறுவடை செய்து சந்தைப் படுத்தியுள்ளார். அவருடைய தோட்ட தக்காளிகளுக்கு ஏற்கெனவே உள்ளூர் மற்றும் அக்கம்பக்கத்து கிராமங்களில் வரவேற்பு அதிகம். இந்நிலையில் ஒவ்வொரு பெட்டியையும் அவர் சுமார் ரூ.1000 முதல் ரூ.2400 வரை விற்பனை செய்துள்ளார். இதன் மூலம் அவருக்கு ரூ.1.5 கோடி வருவாய் கிட்டியுள்ளது.

துக்காராமின் மருமகள் சோனாலி தக்காளியைப் பயிரிடுதல், அறுவடை செய்தல், அதனை பெட்டிகளில் அடைத்தல் போன்ற வேலைகளைச் செய்கிறார். அவரது மகன் ஈஸ்வர் விற்பனை, நிதி மேலாண்மை வேலைகளைச் செய்கிறார். கடந்த மூன்று மாதங்களில் தாங்கள் செலுத்திய கடின உழைப்புக்குப் பலன் கிடைத்துள்ளது என அவர்கள் தெரிவித்துள்ளனர். துக்காராம் மட்டுமல்ல புனே மாவட்டத்தின் ஜுன்னார் கிராமத்தைச் சேர்ந்த தக்காளி விவசாயிகள் பலரும் ஒரே மாதத்தில் கோடீஸ்வரராகியுள்ளனர்.

அதேபோல் ஜுன்னார் கிராமத்தைச் சேர்ந்த தக்காளி விவசாயிகள் கூட்டமைப்பு ஒரே மாதத்தில் ரூ.80 கோடிக்கு வர்த்தகம் செய்துள்ளது. இதன்மூலம், சுற்றுவட்டாரத்தைச் சேர்ந்த 100 பெண்களுக்கு வேலைவாய்ப்பு கிடைத்துள்ளது. ஜுன்னு வேளாண் உற்பத்தி சந்தையில் முதல் தர தக்காளி 20 கிலோ கொண்ட ஒரு பெட்டி ரூ.2500க்கு விற்பனையாகிறது. சில்லறை வணிகத்தில் கிலோ ரூ.125-க்கு விற்பனை செய்யப்படுகிறது. தக்காளி விற்று கோடீஸ்வரரான விவசாயியின் கதை மகாராஷ்டிராவில் மட்டுமல்ல, நாடு முழுவதுமே நடந்து வருகிறது. கர்நாடகாவில் ஒரு விவசாயக் குடும்பம் கடந்த வாரம் கோலார் சந்தையில் 2000 பெட்டி தக்காளி விற்று ரூ.38 லட்சம் லாபத்துடன் திரும்பிய செய்தி வெளியானது கவனிக்கத்தக்கது.

# தருமபுரி விவசாயி வீட்டில் ரூ.27.50 லட்சம் பணம், நகை கொள்ளை – மர்ம நபர்களுக்கு போலீசார் வலைவீச்சு

அரூர் , ஜூலை.16-

தருமபுரியில் விவசாய வீட்டிற்குள் புகுந்து ரூ.27.50 லட்சம் பணம், நகையை கொள்ளை அடித்த மர்ம நபர்களை போலீஸார் தேடி வருகின்றனர்.



தருமபுரி மாவட்டம், அரூர் அருகே உள்ள அச்சல்வாடியைச் சேர்ந்தவர் குமரேசன் (46). விவசாயியான இவர், தனது உறவினர்களின் நிலத்தை விற்ற 25 லட்சம் ரூபாய் பணம் மற்றும் தனது மாடுகளை விற்ற பணம் ரூ.2.50 லட்சம் என மொத்தம் 27.50 லட்சத்தை தனது வீட்டில் வைத்துள்ளார்.

இந்நிலையில் வெள்ளிக்கிழமை அதே ஊரில் உள்ள தனது அண்ணன் வீட்டிற்கு குமரேசனும், அவரது மனைவியும் சென்றுள்ளனர். சிறிது நேரத்திற்குப் பிறகு திரும்பி வந்து வீட்டிற்குள் பார்த்தபோது வீட்டின் பூட்டு உடைக்கப்பட்டு இருப்பதைக் கண்டு அதிர்ச்சி அடைந்தார். உள்ளே சென்று பார்த்தபோது பீரோவில் வைத்திருந்த ரூ. 27.50 லட்சம் ரொக்கம், 9 பவுன் நகை திருடு போனது தெரியவந்தது. திருடிய மர்ம நபர்கள் கைரேகை பதிய கூடாது என்பதற்காக ஆங்காங்கே மிளகாய் பொடிகளை தூவிச் சென்றுள்ளனர். இது குறித்து குமரேசன் அரூர் போலீசார் புகார் அளித்தார். தகவலறிந்த மாவட்ட காவல் கண்காணிப்பாளர் ஸ்டீபன் ஜேசுபாதம் சம்பவ இடத்தை பார்வையிட்டு விசாரணை நடத்தினார். புகாரின் பேரில் அரூர் போலீசார் வழக்குப் பதிவு செய்து மர்ம நபர்களை தேடி வருகின்றனர்.




# முக்கனாமலைபட்டியில் கல்வி வளர்ச்சி நாள்



அன்னவாசல் , ஜூலை.16-

கல்விக்கண் திறந்த பெருந்தலைவர் காமராஜரின் பிறந்ததினம் கல்வி வளர்ச்சி நாளாக அரசு மேல்நிலைப்பள்ளி முக்கனாமலைபட்டியில் பள்ளியின் தலைமை ஆசிரியர் மோகன் தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் சிறப்பு அழைப்பாளராக மாவட்ட சுற்றுச்சூழல் ஒருங்கிணைப்பாளர் சாலை செந்தில் கலந்துகொண்டு மரக்கன்றுகளை பள்ளி வளாகத்தில் நட்டு வைத்து மாணவர்களுக்கு தமிழக கல்வி வரலாற்றில் பெருந்தலைவரின் சீரிய பணிகள் குறித்து சிறப்புரையாற்றினார்.

மொத்தம் 25 மரக்கன்றுகள் பள்ளி வளாகத்தில் நடப்பட்டன. பள்ளியின் சுற்றுச்சூழல் மன்ற பொறுப்பாசிரியர் ஏற்பாட்டினை செய்திருந்தார். ஆசிரியர்கள் செல்வராஜ், சின்ன கருப்பையா, ஜீரோ, கலைமகள் ஆகியோர் கல்வி வளர்ச்சி நாள் குறித்து பேசினர். பள்ளியின் ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் கலந்து கொண்டனர்.

# அசோக சக்கரம், இஸ்ரோ சின்னம் நிலவில் இந்தியாவின் அடையாளத்தை நிறுவப் போகும் சந்திரயான்–3

ஸ்ரீஹரிகோட்டா , ஜூலை.16-

நிலவுக்கு அனுப்பப்பட்டுள்ள சந்திரயான் -3 விண்கலம் அங்கு நிலவின் மேல்பரப்பில் இந்தியாவின் அடையாளத்தைப் பதிக்கவுள்ளது. விண்கலத்தின் ரோவர் பிரக்யானின் பின்பக்க கால்களில் தேசிய சின்னமான அசோக சக்கரம் மற்றும் இஸ்ரோவின் சின்னம் ஆகியவை பொருத்தப்பட்டுள்ளன. அவை நிலவில் இந்தியாவின் தடத்தை பதிக்கும்.



ஸ்ரீஹரிகோட்டாவில் இருந்து எல்விஎம்-3 ராக்கெட் மூலம் சந்திரயான்-3 விண்கலம் ஜூலை 15ம் தேதி மதியம் 2.35 மணிக்கு விண்ணில் செலுத்தப்பட்டது. புறப்பட்ட 16 நிமிடங்களில், திட்டமிட்ட புவி நீள்வட்ட சுற்றுப்பாதையில் விண்கலம் வெற்றிகரமாக நிலைநிறுத்தப்பட்டது. 41 நாள் பயணத்துக்கு பிறகு, ஆகஸ்ட் மாத இறுதியில் நிலவை சந்திரயான்-3 சென்றடைகிறது.

இந்திய விண்வெளி ஆய்வு நிறுவனம் (இஸ்ரோ), நிலவை ஆய்வு செய்வதற்காக கடந்த 2008-ம் ஆண்டு சந்திரயான்-1 விண்கலத்தை அனுப்பியது. அது நிலவின் தரைப்பகுதியில் இருந்து 100 கி.மீ. உயரத்தில் நிலவை சுற்றி வந்து 312 நாட்கள் ஆய்வு செய்தது. அப்போது, நிலவின் மேற்பரப்பில் பனிக்கட்டி வடிவில் நீர் இருப்பதை உறுதிப்படுத்தியது.

அதைத் தொடர்ந்து, நிலவில் தரையிறங்கி ஆய்வு செய்யும் நோக்கில் சந்திரயான்-2 திட்டத்தை செயல்படுத்த இஸ்ரோ கடந்த 2008-ம் ஆண்டு முடிவு செய்தது. சந்திரயான்-2 விண்கலம் 2019 செப்டம்பர் மாதம் நிலவின் சுற்றுப்பாதையை அடைந்தது. எனினும், தொழில்நுட்பக் கோளாறால், திட்டமிட்டபடி லேண்டர் கலன் தரையிறங்காமல் நிலவில் மோதி செயலிழந்தது. இந்நிலையில், நிலவுக்கு சந்திரயான் -3 விண்கலம் அனுப்பப்பட்டுள்ளது. அது அங்கு நிலவின் மேல்பரப்பில் இந்தியாவின் அடையாளத்தைப் பதிக்கவுள்ளது.

# இந்திய ரூபாயை பொது நாணயமாக பயன்படுத்த இலங்கை ஆலோசனை

கொழும்பு , ஜூலை.16-

இந்திய ரூபாயை இலங்கையும் பொது நாணயமாக பயன்படுத்துவது குறித்து ஆலோசிப்பதாக அந்நாட்டின் இலங்கை அதிபர் ரணில் விக்கிரமசிங்கே தெரிவித்துள்ளார். அமெரிக்க டாலருக்கு நிகராக இந்திய ரூபாய் பயன்படுத்தப்படுவதைக் காண விரும்புவதாக அதிபர் ரணில் விக்கிரமசிங்கே தெரிவித்துள்ளார். இந்திய சிஇஒக்கள் கூட்டமைப்பில் உரையாற்றியபோது ரணில் விக்கிரமசிங்கே இதனைத் தெரிவித்தார்.



இந்நிகழ்வில் அவர் பேசுகையில், "இந்தியாவின் அண்டை நாடாக இருப்பதால் இலங்கை வளமான வரலாறு, கலாசார பாரம்பரியம், 2500 ஆண்டுகளுக்கும் மேற்பட்ட நீண்ட கால நட்பு ஆகியனவற்றால் பயனடைகிறது. கிழக்கு ஆசிய நாடுகளான ஜப்பான், கொரியா, சீனா கடந்த 75 ஆண்டுகளில் பெரும் வளர்ச்சி கண்டன. இப்போது இந்து மகா சமுத்திரப் பிராந்தியத்தில் இது இந்தியாவின் காலம். அமெரிக்க டாலருக்கு நிகராக இந்திய ரூபாய் பயன்படுத்தப்படுவதைக் காண விரும்புகிறேன்.

இந்திய ரூபாயையே இலங்கையிலும் ஒரு பொது நாணயமாக பயன்படுத்தினாலும், அதில் பெரிய வித்தியாசம் இருக்கப்போவதில்லை. அதை, எப்படி சாத்தியப்படுத்துவது என்று இனி ஆலோசிக்கப் போகிறோம்.

வெளி உலகுடனான நட்புறவில் இன்னும் வெளிப்படைத்தன்மையுடன் இருக்க் வேண்டிய சூழலில் இலங்கை உள்ளது. உலகம் பல புதிய பரிமாணங்களில் வளர்கிறது. இந்தியா பிரதமர் மோடி தலைமையில் வேகமாக முன்னேறிக் கொண்டிருக்கிறது" என்று கூறியுள்ளார்.

அடுத்த வாரம் ரணில் விக்கிரமசிங்கே டெல்லி வருகிறார். இலங்கையின் அதிபராக கடந்த ஆண்டு அவர் பதவியேற்ற பின்னர் இந்தியா வருவது இது முதன்முறையாகும்.

### காமராஜர் பிறந்த நாள் சிலைக்கு மாலை அணிவித்து

# அரசு பள்ளி மாணவர்களுக்கு நோட்டுப் புத்தகம் வழங்கிய விஜய் ரசிகர்கள்



சென்னை, ஜூலை.16-

பெருந்தலைவர் காமராஜர் பிறந்த நாளை முன்னிட்டு விஜய் மக்கள் இயக்கம் சார்பாக தமிழ்நாடு முழுவதும் உள்ள காமராஜரின் திருவுருவ சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்த அறிவுறுத்தப்பட்டது

அதன் அடிப்படையில் வடசென்னை தெற்கு மாவட்ட எண்ணூர் பகுதி தலைமை தளபதி விஜய் மக்கள் இயக்கம் சார்பில் கர்மவீரர் காமராஜரின் 121 வது பிறந்த நாளை முன்னிட்டு கத்திவாக்கம் பகுதியில் அமைந்துள்ள காமராஜர் சிலைக்கு விஜய் ரசிகர்கள் பேரணியாகச் சென்று மாலையிட்டு மரியாதை செலுத்தினர்

வடசென்னை தெற்கு மாவட்ட சிறப்பு அழைப்பாளர் இளைஞர் அணி சீனிவாசன் ஏற்பாட்டில் கத்திவாக்கம் மாநகராட்சி நடுநிலைப்பள்ளியில் 500 பேருக்கு இனிப்புகள் வழங்கியும் நோட்டுப் புத்தகங்களை வழங்கியும் பிறந்தநாளை கொண்டாடினர்

இதனை அடுத்து கல்வி வளர்ச்சி தினமான நேற்று அரசு பள்ளியில் மாணவியர்கள் காமராஜரின் பெருமையை பாடலாக பாடினர் இதில் பேச்சு போட்டி கட்டுரைபோட்டி ஓவியப் போட்டிகள் நடைபெற்றன பின்னர் விஜய் ரசிகர்கள் ஆட்டோ ஓட்டுநர்கள் மாநகர பேருந்து பயணிகளுக்கு இனிப்புகள் வழங்கி காமராஜர் பிறந்த நாளை கொண்டாடினார்

நிகழ்ச்சியில் கணேசன் ஷாஜகான் சதீஷ் ஆனந்த் ராமகிருஷ்ணன் சுகுமார் பிரபு ராஜேஷ் பன்னீர்செல்வம் மதன்குமார் செல்வேந்திரன் ராஜ்குமார் உள்ளிட்டோர் உடன் இருந்தனர்

# பள்ளிகளில் கல்வி வளர்ச்சி நாள் புதுக்கோட்டை முதன்மைக்கல்வி அலுவலர் மா.மஞ்சுளா பங்கேற்பு

புதுக்கோட்டை, ஜூலை. 16-

முன்னாள் தமிழ்நாடு முதலமைச்சர் பெருந்தலைவர் காமராசரின் பிறந்த நாளான ஜூலை 15 (சனிக்கிழமை) நேற்று பள்ளிகளில் கல்வி வளர்ச்சி நாளாக கொண்டாடவேண்டும் என்று அரசு அறிவுறுத்தலின்படி நேற்று காலையில் ஆலங்குடி அரசு மகளிர் மேல்நிலைப்பள்ளியில் மாவட்ட முதன்மைக்கல்வி அலுவலர் மா.மஞ்சுளா கலந்துகொண்டு பெருந்தலைவர் காமராசரின் உருவப்படத்திற்கு மலர் தூவி மரியாதை செய்து மாணவிகளுக்கு அறிவுரை வழங்கினார்.




அதனைத்தொடர்ந்து ஆலங்குடி காமராசர் சாலையில் அமைந்துள்ள பெருந்தலைவர் காமராசரின் சிலைக்கு ஆலங்குடி அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளி மாணவர்கள் மாலை அணிவித்து மரியாதை செய்த நிகழ்வில் மாவட்ட முதன்மைக்கல்வி கலந்துகொண்டு சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செய்தார். பின்னர் கொத்தமங்கலம் அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளியில் காமராசர் உருவப்படத்திற்கு மலர் தூவி மரியாதை செய்து பேச்சுப்போட்டி, கட்டுரைப்போட்டி, ஓவியப்போட்டி, கவிதைப்போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு பரிசு வழங்கி பாராட்டினார்.

இந்தநிகழ்வில்பள்ளிகளின் தலைமையாசிரியர்கள், முதன்மைக்கல்வி அலுவலரின் நேர்முக உதவியாளர் (உயர்நிலை) ராஜூ, முதன்மைக்கல்வி அலுவலக பள்ளித்துணை ஆய்வாளர் கி.வேலுச்சாமி, ஆசிரிய, ஆசிரியைகள், மாணவ, மாணவிகள் கலந்துகொண்டனர்.

# 'தாராவி திட்டமும் அதானியும்' தேவேந்திர பட்னாவிஸின் 'கடைசி' செயல் மீது காங்கிரஸ் கடும் தாக்கு

புதுடெல்லி, ஜூலை.16-

"மகாராஷ்டிரா அரசின் வீட்டு வசதித் துறை அமைச்சராக தேவேந்திர பட்னாவிஸின் கடைசி செயல், மாநில பாஜக அரசுகளை பிரதமர் மோடி தனது கூட்டாளிகளின் ஏடிஎம் இயந்திரங்களாக மாற்றி வைத்திருப்பற்கு உதாரணம்" என்று காங்கிரஸ் கட்சி விமர்சித்துள்ளது.



இது குறித்து காங்கிரஸ் கட்யின் ஊடகப் பிரிவு பொதுச் செயலாளர் ஜெய்ராம் ரமேஷ் தனது ட்விட்டர் பக்கத்தில் நீண்ட பதிவிட்டுள்ளார். அதில்: "வீட்டு வசதித் துறையை முறையாக வெள்ளிக்கிழமை ஒப்படைப்பதற்கு முன்பு அத்துறை அமைச்சராக தேவேந்திர பட்னாவிஸ் தனது கடைசிசெயலாக, மும்பையின் மையப்பகுதியில் உள்ள 600 ஏக்கரை உள்ளடக்கிய ரூ.5,069 கோடி மதிப்புள்ள தாராவி மறுசீரமைப்பு திட்டத்தை அதானி குழுமத்துக்கு மாற்ற ஒப்புதல் அளித்துள்ளார்.

சில பிரச்சினைகள் காரணமாக முந்தைய ஒப்பந்தம் ரத்து செய்யப்பட்ட நிலையில், பிரதமர் மோடியின் நண்பர் மட்டுமே ஒப்பந்தத்தில் வெற்றி பெறும் வகையில் ஷிண்டே - பட்னாவிஸ் அரசு ஒப்பந்த விதிகளில் சில மாற்றங்களை ஏற்படுத்தியுள்ளது. அதில், முந்தைய ஒப்பந்ததாரை பின்னுக்குத் தள்ளி அதானி குழுமம் வெற்றி பெறும் வகையில் குறைந்தபட்ச நிகர மதிப்புத் தொகையை ரூ.10,000 கோடியில் இருந்து ரூ.20,000 கோடியாக உயர்த்தியது; அதனையும் பணமே இல்லாத அதானி குழுமம் தவணை முறையில் செலுத்துவதற்கு வழிவகை செய்ததும் அடங்கும்.

பிரதமர் மோடி தனது மாநில அரசுகளை அவரது நெருங்கிய கூட்டாளிகளின் ஏடிஎம் இயந்திரங்களாக மாற்றி வைத்திருப்பதற்கு இது மற்றுமொரு உதாரணம். மும்பையின் குடிசைவாசிகளின் நிலமும் வாழ்வாதாரமும் கூட 'மோதானி ஊழலில்' இருந்து காப்பாற்றப்பட முடியாது போலும்" என்று ஜெய்ராம் ரமேஷ் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து சிவசேனா (உத்தவ் தாக்கரே அணி) எம்.பி., பிரியங்க சதுர்வேதி தனது ட்விட்டர் பதிவில், "மகாராஷ்டிராவின் வீட்டு வசதித் துறை அமைச்சகத்தை கவனித்து வந்த துணை முதல்வர் தேவேந்திர பட்னாவிஸ் தனது பொறுப்பை அவரது சகா அதுல் சேவிடம் வெள்ளிக்கிழமை ஒப்படைப்பதற்கு முன்பாக அரசின் தீர்மானத்தை நிறைவேற்றினார். தொழிலதிபர்களின் இந்த நவீனயுக அடிமைகளை சந்தியுங்கள்" என்று தெரிவித்துள்ளார்.

முன்னதாக, தேசியவாத காங்கிரஸின் அஜித் பவார் தனது ஆதரவு குழுவுடன் மகாராஷ்டிரா அரசில் இணைந்ததைத் தொடர்ந்து அம்மாநில அமைச்சரவையில் ஏற்பட்டுள்ள மாற்றத்தால், துணை முதல்வர்களில் ஒருவரும், பாஜக மூத்த தலைவருமான தேவந்திர பட்னாவிஸ், தான் கவனித்து வந்த வீட்டுவசதித் துறை அமைச்சர் பொறுப்பை சகாவிடம் ஒப்படைப்பதற்கு முன்பு அமைச்சராக கடைசி நாளில் மாநில அரசுடன் இணைந்து அதானி குழுமம் செயல்படுத்த இருக்கும் தாராவி மறுசீரமைப்பு திட்டத்துக்கு வெள்ளிக்கிழமை ஒப்புதல் அளித்தது குறிப்பிடத்தக்கது.



செங்கல்பட்டு மாவட்டம் மதுராந்தகம் நகர காங்கிரஸ் கட்சி சார்பில் பெருந்தலைவர் காமராஜரின் 121 வது பிறந்தநாள் விழா மதுராந்தகம் நகரத் தலைவர் கண்ணன் தலைமையில் பெருந்தலைவர் காமராஜரின் திருவுருவ படத்திற்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர் அதன்பின் ஏழை எளிய மக்களுக்கு இனிப்புகள் வழங்கப்பட்டது. இந்த நிகழ்ச்சியில் மாவட்ட துணைத் தலைவர் கிறிஸ்டோபர் ஜெயபால் புலவர் தங்க தமிழ்அமுதன் மாவட்ட செயலாளர் கௌதம் வட்டாரத் தலைவர்கள் முருகன் விநாயகம் நகர விவசாய சங்க தலைவர் கோதண்டராமன் காங்கிரஸ் கட்சி நிர்வாகிகள் சுப்பிரமணி மணி ராமமூர்த்தி வெங்கடேசன் உள்ளிட்ட காங்கிரஸ் நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

# பொறையார் நிவேதா மெட்ரிக் மேல்நிலைப் பள்ளியில் காமராஜர் பிறந்த நாள் விழா



தரங்கம்பாடி, ஜூலை- 16:
முன்னாள் முதல்வர் கர்மவீரர் பெருந்தலைவர் காமராஜரின் 121 வது பிறந்தநாள் விழா கல்வி வளர்ச்சி நாளாக சனிக்கிழமை தமிழகம் முழுதும் கொண்டாடப்பட்டது. அந்த வகையில் மயிலாடுதுறை மாவட்டம் தரங்கம்பாடி தாலுகா பொறையாரில் உள்ள நிவேதா மெட்ரிகுலேஷன் மேல்நிலைப் பள்ளியில் கல்வி வளர்ச்சி நாள் கொண்டாடப்பட்டது.

இதில் சிறப்பு அழைப்பாளராக தரங்கம்பாடி பேரூராட்சி மன்ற தலைவர் சுகுண சங்கரி குமரவேல் கலந்து கொண்டு முன்னாள் முதல்வர் கர்மவீரர் காமராஜர் திரு உருவப்படத்திற்கு மலர் தூவி மரியாதை செலுத்தி சிறப்புரையாற்றினார். மேலும் பள்ளியின் மாணவ மாணவியர்கள் பள்ளியின் வளாகத்தில் 200-க்கும் மேற்பட்ட சார்ட்போர்ட் அட்டையை பயன்படுத்தி கர்மவீரர் காமராஜரின் உருவப்படத்தை பிரம்மாண்டமாக வரைந்து ஆசிரியர்கள் மற்றும் பெற்றோர்களிடம் பாராட்டுகளை பெற்றனர்.

தொடர்ந்து அவரைப் போற்றும் வகையில் மாணவ மாணவிகள் கர்மவீரர் காமராஜர் வேடமணிந்து, பேச்சு போட்டி, கலந்துரையாடல், காமராஜரை நினைவு கூறும் பாடல்கள் என ஆங்கிலம் மற்றும் தமிழில் பேசி பாராட்டுகள் பெற்றனர். அதை தொடர்ந்து மாணவ மாணவிகளுக்கு நோட்டு புத்தகங்களை பேரூராட்சி மன்ற தலைவர் வழங்கினார். இதில் பள்ளியின் தாளாளர் லட்சுமி முருகன், பள்ளியின் முதல்வர் அமுதா, பள்ளியின் ஆசிரியர்கள் சாந்தி, மீராபாய், முருகன் உள்ளிட்ட ஆசிரியை ஆசிரியர்கள் பள்ளி மாணவர்கள் ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

# தந்தையின் நினைவாக மணிமண்டபம் அமைத்து, 5 கிராம மக்களுக்கு உதவி வழங்கிய கவுன்சிலர்



மயிலாடுதுறை- ஜூலை- 16:
மயிலாடுதுறை மாவட்டம் மயிலாடுதுறை 25-வது வார்டு ஒன்றியக்குழு உறுப்பினர் அபிராமி வெங்கடேசன். வெங்கடேசனின் தந்தை சுப்பிரமணியன் வயது முதிர்வு காரணமாக 2021-ஆம் ஆண்டு உயிரிழந்தார். சுப்பிரமணியனுக்கு ஆண்டுதோறும் அவரின் மகன் சுற்றுவட்டார பகுதிகளில் வசிக்கும் கிராமமக்களுக்கு நல உதவிகளை வழங்கி வருகிறார். வெங்கடேசன் தனது தந்தையாரின் நினைவைப் போற்றும் வகையில், அகரகீரங்குடி கிராமத்தில் சுப்பிரமணியனுக்கு முழு உருவச்சிலை அமைத்து, மணி மண்டபம் எழுப்பியுள்ளார்.

இதில் சிறப்பு அழைப்பாளராக பூம்புகார் தொகுதி உறுப்பினரும் மயிலாடுதுறை மாவட்ட திமுக செயலாளருமான நிவேதா எம்.முருகன் கலந்துகொண்டு மணி மண்டபத்தை திறந்து வைத்து சிறப்புரையாற்றினார் .அகரகீரங்குடி, பட்டமங்கலம், முட்டம், சிறுகோவங்குடி, ஊர்குடி ஆகிய 5 கிராமங்களில் வசிக்கும் கிராம பொது மக்களுக்கு நல திட்ட உதவிகள் வழங்கினார். மேலும், இந்த 5 கிராமங்களில் வசிக்கும் 30-க்கும் மேற்பட்ட தூய்மைப் பணியாளர்களுக்கு நிதியுதவி வழங்கிகினார். மேலும் 2000 பேருக்கு அன்னதானமும் வழங்கப்பட்டது.

இதில் சட்டமன்ற உறுப்பினர்கள் ராஜகுமார், பன்னீர்செல்வம், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் சத்தியசீலன், குத்தாலம் க.அன்பழகன், மாவட்ட துணை செயலாளர் மு.. ஞானவேலன், செல்வமணி, தஞ்சை மண்டல தகவல் தொழில் நுட்ப அணி பொறுப்பாளர் பி.எம்.ஸ்ரீதர், எம். அப்துல் மாலிக், ஒன்றிய செயலாளர்கள் இமயநாதன், முருகமணி, இளையபெருமாள், மங்கை சங்கர், பி.எம்.அன்பழகன், அமுர்த.விஜயகுமார், ராஜா, மாவட்ட தகவல் தொழில்நுட்ப அண பொறுப்பாளர் விக்கி மற்றும் திமுக நிர்வாகிகள் பலர் கலந்துகொண்டனர்.

வயது முதிர்வில் வீட்டில் இருக்கும் பெற்றோரை பராமரிக்கவே இக்கால இளைஞர்கள் தயங்கும் நிலையில், உயிரிழந்த தனது தந்தையின் நினைவாக அவருக்கு சிலை அமைத்து, மணி மண்டபம் அமைத்து ஐந்து கிராம மக்களுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கிய ஒன்றிய கவுன்சிலர் வெங்கடேசனை பொதுமக்கள், சமூக ஆர்வலர்கள் நன்றி தெரிவித்து வாழ்த்துக்கள் கூறினர்.

# புதுக்கோட்டை பார்வைத்திறன் குறையுடையோருக்கான பள்ளியில் காமராஜர் பிறந்த நாள் விழா




புதுக்கோட்டை, ஜூலை.16-
கல்விக்கண் திறந்த காமராஜர் பிறந்த நாளான நேற்று (ஜூலை 15) பார்வைத்திறன் குறையுடையோருக்கான அரசு நடுநிலைப் பள்ளியில் காமராஜர் பிறந்த நாள் கல்வி வளர்ச்சி நாளாக கொண்டாடப்பட்டது.

இதில் பார்வைத்திறன் குறையுடையோருக்கான அரசு நடுநிலைப்பள்ளியில் ஒன்றாம் வகுப்பு முதல் எட்டாம் வகுப்பு வரை உள்ள மாணவர்கள் அனைவரும் ரயில் நிலையம் அருகில் உள்ள நகராட்சி தொடக்கப் பள்ளிக்கு சென்று நகராட்சி தொடக்கப் பள்ளியில் படிக்கும் ஒன்று முதல் ஐந்தாம் வகுப்பு வரை உள்ள 227 பள்ளி மாணவர்களுக்கு பேனா, பென்சில், ஸ்கேல், ரப்பர், ஷார்ப்னர், மற்றும் வண்ண பேனாக்கள் அடங்கிய தொகுப்பை வழங்கி காமராசரின் கல்வி வளர்ச்சிக்கு ஆதாரமாக பள்ளி மாணவர்கள் செயல்பட்டார்கள்.

பேனா பென்சில் இவற்றை கொண்டு எங்களால் எழுத முடியவில்லை பார்வை உள்ள படிக்கும் பள்ளி மாணவர்களுக்கு வழங்கலாம் என்று மாணவர்கள் விருப்பம் தெரிவித்ததின் பேரில் இந்த நிகழ்ச்சி ஏற்பாடு செய்யப்பட்டது, இந்த கல்வி உபகரணங்கள் வழங்கும் நிகழ்வில் பார்வையற்ற பள்ளி மாணவர்கள் உற்சாகத்தோடு எழுது பொருட்களை வழங்கி மிக்க மகிழ்ச்சி உடன் பள்ளிக்கு திரும்பினார்கள்.

இந்த கல்வி வளர்ச்சி நாளின் தொடர்ச்சியாக நேற்று நான்கு மணி அளவில் பள்ளியிலேயே காமராசர் பிறந்த நாளை கல்வி வளர்ச்சி நாளாக கொண்டாடப்பட்டது. இவ்விழாவில் பாலிகிராப்ட் கம்பெனி உரிமையாளர் கார்த்திக் மற்றும் அமிர்தம் ஸ்டோர் உரிமையாளர் தனசேகர், இவ்விழாவிற்கு சிறப்பு விருந்தினர்களாக வருகை தந்தார்கள், மேலும் பள்ளியின் தலைமையாசிரியர் வடிவேலன் சிறப்புறையாற்றினார்.

பார்வையற்றோர் பள்ளி மாணவர்கள் காமராசரை பற்றி பேசினார்கள் பள்ளி மாணவர்கள் காமராசரின் புகழை போற்றும் விதமாக நடனம் மற்றும் பாடல் இசைத்தார்கள் கலை நிகழ்ச்சிகளில் கலந்து கொண்ட அனைத்து மாணவர்களுக்கும் சிறப்பு விருந்தினர்கள் பரிசுகள் வழங்கி மாணவர்களை உற்சாகப்படுத்தினர்.



▶ மதுரை விளக்குத்தூண் அருகில் எளிமைக்கும் நேர்மைக்கும் பெயர் பெற்றவர் கல்விக்கண் திறந்த கர்மவீரர் காமராஜர், 121 வது பிறந்த நாளை முன்னிட்டு அவரது உருவ சிலைக்கு தளபதி விஜய் மக்கள் இயக்கம் வடக்கு மாவட்டம் விஜய் அன்பன் கல்லாணை சார்பாக மாலை அணிவித்து இனிப்பு வழங்கப்பட்டது. உடன் தளபதிப்ரியன் நடராஜன் தளபதி விஷால் யு.பி.எம். ஆனந்த் ரத்தம் முத்துப்பாண்டி, நாகராஜன்,ரமேஷ்,பாண்டிமுருகன் மற்றும் பலர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.



▶ செங்கல்பட்டு மாவட்டம் செய்யூர் சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட சித்தாமூர் வட்டார காங்கிரஸ் கமிட்டி சார்பில் பெருந்தலைவர் காமராஜரின் 121 வது பிறந்த நாளை முன்னிட்டு பள்ளி மாணவ மாணவிகளுக்கு நோட்டு புத்தகம் பேனா பென்சில் மற்றும் அன்னதானம் வழங்கும் நிகழ்ச்சி வட்டாரத் தலைவர் சிவா தலைமையில் சித்தாமூர் கூட்டுச்சாலையில் நடைபெற்றது இந்த நிகழ்ச்சியில் மாவட்ட பொது செயலாளர் மகாலிங்கம் இளைஞரணி தொகுதி செயலாளர் ராம்குமார் மற்றும் காங்கிரஸ் கட்சி நிர்வாகிகள் சதீஷ் நந்தகுமார் பாலாஜி அலெக்ஸ் ராஜா உள்ளிட்ட காங்கிரஸ் கட்சி நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர். இதேபோன்று செய்யூர் வட்டார காங்கிரஸ் கட்சி சார்பில் செய்யூர் பேருந்து நிலையத்தில் கேக் வெட்டி மக்களுக்கு இனிப்புகளை வழங்கினர். இதேபோன்று கல்பாக்கம் நகர காங்கிரஸ் கட்சி சார்பில் பொது மக்களுக்கு அன்னதானம் வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது இந்த நிகழ்ச்சியில் காங்கிரஸ் கட்சியின் மாநில பேச்சாளர் கோட்டை தயா செந்தில் மற்றும் காங்கிரஸ் கட்சி நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.



▶ திருவள்ளூர் மாவட்டம், மீஞ்சூரில், வசந்த் அண்ட் கோ தனது 112 வது கிளையை, கோலாகலமாகத் தொடங்கியுள்ளது. இந்த புதிய கிளையை வசந்த் அண்ட் கோ குழுமத்தின் நிர்வாக இயக்குனர் தமிழ்ச்செல்வி, ஜெகன்நாத் மற்றும் தங்கமலர், கன்னியாகுமரி நாடாளுமன்ற உறுப்பினர் விஜய் வசந்த் ஆகியோர் ரிப்பன் வெட்டி திறந்து வைத்து, குத்து விளக்கு ஏற்றி தொடங்கி வைத்தனர். இந்த கோலாகல திறப்பு விழாவில், பில்டிங் உரிமையாளர் பாஸ்கரன், பேரூராட்சி தலைவர் ருக்மணி மோகன்ராஜ், மீஞ்சூர் வட்டார நாடார் உறவின்முறை தலைவர் அன்பழகன், ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர். திறப்பு விழாவுக்கான அனைத்து ஏற்பாடுகளையும் வசந்த் அண்ட் கோ நிறுவனத்தின் பொது மேலாளர் (சந்தைப்படுத்துதல்) சிவசுப்பிரமணியன் சிறப்பாக செய்திருந்தார். புதிய கிளை திறப்பு விழா மற்றும் வசந்த் அண்ட் கோ -வின் 46வது ஆண்டு தொடக்க விழாவை முன்னிட்டு, ஐந்து நாட்கள் மட்டும், உலகத்தரம் வாய்ந்த வீட்டு உபயோகப் பொருட்கள் அனைத்திற்கும் மிகக் குறைந்த விலை, சலுகைகள், சிறப்பு தள்ளுபடிகள், பரிசுப் பொருட்கள், தங்க நாணயம் ஆகியவை வழங்கப்பட உள்ளன.

# நிலக்கடலையில் கூடுதல் மகசூல் பெற வேளாண்மை உதவி இயக்குநர் ஆலோசனை

பொன்னமராவதி ,ஜூலை-16-
புதுக்கோட்டை மாவட்டம், பொன்னமராவதி வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் கா. ரஹ்மத் நிஷா பேகம் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில்,



தற்போது இவ்வட்டாரத்தில் உள்ள கிராமங்களில் தொடர்ந்து பருவமழை பெய்துவரும் சூழ்நிலையில் விவசாயிகள் மத்தியில் மானாவரி நிலக்கடலை விதைப்புப் பணி மும்முரமாக நடைபெற்று வருகிறது. இச்சூழ்நிலையில் நிலக்கடலை விதைக்கப்படும்போது அடி உரத்துடன் ஏக்கருக்கு ஜிப்சம் 200 கிலோ இட்டு விதைப்பு செய்யப்பட வேண்டும்.

நாம் இடும் ஜிப்சத்தில் கால்சியம் சத்து 23.31 சதவீதமும், கந்தக சத்து 18.3 சதவீதமும் இருப்பதால் அதிகளவில் எண்ணெய் சத்துகள் கூடிய பருப்பும் சுண்ணாம்பு சத்து கூடுதலாக கிடைப்பதால் பொக்கு இல்லாமல் திறட்சியான கடலைகள் கிடைக்கிறது. ஜிப்சத்தை அடியுரமாக இடுவதால் விதை எளிதாக முளைத்து ஆரம்ப காலத்தில் செடி நன்கு வளர்வதற்கு தேவையான கந்தகம் மற்றும் சுண்ணாம்பு சத்துகள் எளிதாக கிடைக்கின்றது. அதனால், மண்ணின் தன்மை மாறாமல், சீர்படுத்தி, இயற்கையான மண்ணின் கட்டமைப்பு மேம்படுத்தவும், மண்ணை பொலபொலப்பாக்கி மண்துகள்களில் நீர் ஊடுருவி வளமான பயிர்வளர்ச்சியை ஊக்குவிக்குறது.

தற்போது பொன்னமராவதி வட்டார வேளாண்மை விரிவாக்க மையத்தில், மாநில வேளாண் வளர்ச்சித் திட்டத்தின் கீழ் 50 சதவீதம் மானியத்தில் 50 கிலோ மூட்டை ஒன்றிற்கு ரூபாய் 107.50 என்னும் மிகக் குறைந்த விலையில் விற்பனை செய்யப்பட்டு வருகிறது. ஆகவே, விவசாயிகள் அனைவரும் தங்கள் பகுதி உதவிவேளாண்மை அலுவலர் அல்லது வேளாண்மை விரிவாக்க மையத்தை அணுகி, மானியத்தில் பெற்றுச் செல்லுமாறு அவர்கள் வெளியிட்டுள்ளசெய்திகுறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# ஒன்றியஅளவில் நடைபெற்ற பேச்சுப்போட்டியில் கந்தர்வகோட்டை அருள்மாரி பள்ளி மாணவி சாதனை

கந்தர்வகோட்டை, ஜூலை.16-
புத்தக திருவிழாவை முன்னிட்டு தமிழ்நாடு அறிவியல் இயக்கம் சார்பாக கந்தர்வகோட்டை ஒன்றிய அளவில் கலை இலக்கிய போட்டிகள் நேற்று (14.07.2023) நடத்தப்பட்டன. இதில் அரசு மற்றும் தனியார் பள்ளி மாணவ மாணவியர்கள் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.



அதில் கந்தர்வகோட்டை அருள்மாரி மெட்ரிக் பள்ளி 8ஆம் வகுப்பு மாணவி த.அபிநயாஸ்ரீ பேச்சுப்போட்டியில் (6 முதல் 8 ஆம் வகுப்பு பிரிவில்) 2ஆம் இடம் பிடித்து மாவட்ட அளவில் நடைபெறும் போட்டியில் ஒவ்வொரு வருடமும் மாவட்ட மற்றும் மாநில அளவில் நடைபெறும் பல்வேறு போட்டிகளில் அருள் மாரி மெட்ரிக் பள்ளி மாணவ, மாணவிகள் கலந்துகொண்டு சிறப்பிடம் பெறுவது குறிப்பிடத்தக்கது.

# எல்லாபுரம் தெற்கு வட்டார காங்கிரஸ் கட்சி சார்பில் வெங்கல் கிராமத்தில் காமராஜரின் 121-வது பிறந்தநாள் விழா

ஊத்துக்கோட்டை, ஜூலை16-
திருவள்ளூர் மாவட்டம், எல்லாபுரம் தெற்கு வட்டார காங்கிரஸ் கட்சி சார்பில் வெங்கல் கிராமத்தில் தமிழக முன்னாள் முதல்வர்,பெருந்தலைவர் காமராஜரின் 121-வது பிறந்த நாள் விழா நேற்று கொண்டாடப்பட்டது.



இதை முன்னிட்டு கட்சி கொடியை ஏற்றி வைத்து, பூக்களால் அலங்கரித்து வைக்கப்பட்டிருந்த காமராஜரின் திரு உருவ படத்துக்கு மலர் தூவி மரியாதை செலுத்தினர். இதன் பின்னர், பொதுமக்களுக்கும், வியாபாரிகளுக்கும்,பஸ் நிறுத்தும் அருகே காத்திருந்த பயணிகளுக்கும் இனிப்பு வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது.

இந்நிகழ்ச்சிகளுக்கு, எல்லாபுரம் தெற்கு வட்டார காங்கிரஸ் கட்சி தலைவர் வெங்கல் டி.சிவசங்கரன் தலைமை தாங்கினார். இதில்,சிறப்பு அழைப்பாளராக திருவள்ளூர் தெற்கு மாவட்டத் தலைவராக நியமிக்கப்பட்ட வீரபுரம் தாஸ் கலந்து கொண்டு காமராஜரின் திரு உருவ படத்துக்கு மலர் தூவி மரியாதை செலுத்தினார். பின்னர், கட்சி கொடியை ஏற்றி வைத்தார்.காங்கிரஸ் கட்சியின் மாநில இளைஞரணி செயலாளர் காங்கை குமார் பொது மக்களுக்கு இனிப்பு வழங்கும் நிகழ்ச்சியை துவக்கி வைத்தார்.

இந்நிகழ்ச்சியில், திருவள்ளூர் வட்டார தலைவர் ஸ்ரீராமுலு,மாவட்டத் துணைத் தலைவர் ஆசிர்வாதம், தொழிலாளர் சங்க மாவட்ட தலைவர் வெள்ளியூர் அன்பு, திருவள்ளூர் ஒன்றிய தொழிலாளர் சங்க தலைவர் வின்சென்ட்,ஒன்றிய கவுன்சிலர் வெங்கல் திருமலைசிவசங்கரன் நிர்வாகிகள் தாமு நாயுடு,டாக்டர் ராமச்சந்திரன், பொன்னூரங்கம்,மகாலிங்கம், ஓம்பிரசாத்,தங்கப்பாண்டியன்நாடார்,பொன்னுராஜ் நாடார், கோவிந்தராஜ் ஆச்சாரி, மனோகரன்,பங்காரு நாயுடு, கமல்,நாகா,அண்ணாமலை உள்ளிட்ட ஏராளமான கட்சி நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

# காட்டாங்கொளத்தூர் ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் மன்றக்கூடம் மற்றும் ஒன்றிய குழு தலைவர் அறை திறப்பு விழா



செங்கல்பட்டு , ஜூலை. 16-
செங்கல்பட்டு மாவட்டம், காட்டாங்கொளத்தூர் ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் மன்றக்கூடம் மற்றும் ஒன்றிய குழு தலைவர் அறை திறப்பு விழா மற்றும் கல்வெட்டு திறப்பு விழா நடைபெற்றது.

விழாவில், சட்டமன்ற உறுப்பினர் செங்கல்பட்டு சட்டமன்ற உறுப்பினர் வரலட்சுமி மதுசூதனன் சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்டு ரிப்பன்வெட்டி அறையை திறந்து வைத்து, குத்து விளக்கு ஏற்றி வைத்தார். விழாவில் 24 ஒன்றிய கவுன்சிலர்களும் கலந்து கொண்டு விழாவினை சிறப்பித்தனர். கலந்து கொண்ட அனைவரையும் ஒன்றிய குழு தலைவர் உதயா கருணாகரன் வரவேற்று உபசரித்தார்.

அலுவலக அறை திறப்பு விழாவில் மாவட்ட ஊராட்சி குழு உறுப்பினர்கள், ஊராட்சி ஒன்றியக் குழு உறுப்பினர்கள், அலுவலக பணியாளர்கள், பொதுமக்கள் ஏராளமானோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

# கறம்பக்குடி அருகே மின்சாரம் தாக்கி ஒருவர் பரிதாப பலி

கறம்பக்குடி, ஜூலை. 16-
கறம்பக்குடி அருகே மரக்கிளைகளை வெட்டியபோது உயர்அழுத்த மின்சாரம் தாக்கி ஒருவர் பரிதாபமாக உயிரிழந்தார். உயிரிழந்த கேசவனின் கண்கள் மதுரை அரவிந்த் கண் மருத்துவமனைக்கு கண் தானம் செய்யப்பட்டது



புதுக்கோட்டை மாவட்டம் கறம்பக்குடி அருகே நைனான்கொள்ளையை சேர்ந்தவர் சுப்பிரமணியன் மகன் கேசவன் (35). இவருக்கு திருமணம் ஆகி இரண்டு குழந்தைகள் உள்ளனர். கேசவன் விவசாயம் செய்து வருகிறார். கேசவன் தனது வீட்டின் அருகே உள்ள சுரேஷ் என்பவரது வீட்டின் முன் உள்ள மரத்தில் ஏறி மரக்கிளைகளை வெட்டிக் கொண்டிருந்தார். அப்போது மரத்தின் மேலே இருந்த உயர் அழுத்த மின் கம்பிகள் மீது மரக்கிளைகள் பட்டதில் கேசவன் மீது உயர் அழுத்த மின்சாரம் தாக்கியது. உடனே அருகில் இருந்தவர்கள் பாதுகாப்பாக கேசவனை மீட்டு மழையூர் அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்றனர். ஆனால் வரும் வழியிலேயே கேசவன் உயிரிழந்து விட்டதாக மருத்துவர்கள் தெரிவித்தனர். இதுகுறித்து வழக்கு பதிவு செய்த மழையூர் காவல் உதவி ஆய்வாளர் தமிழ்ச்செல்வன் உயிரிழந்த கேசவன் உடலை புதுக்கோட்டை அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு பிரேத பரிசோதனைக்கு அனுப்பி வைத்தார். உயிரிழந்த கேசவனின் கண்கள் அவரது மனைவி பழனியம்மாளின் ஒப்புதலோடு மதுரை அரவிந்த் கண் மருத்துவமனைக்கு கண்தானம் செய்யப்பட்டது.

தனது வீட்டின் அருகே மரக்கிளைகளை வெட்டியவர் மீது மின்சாரம் தாக்கி பரிதாபமாக உயிரிழந்த சம்பவம் அப்பகுதியில் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.

# புதுக்கோட்டை நகரில் காங்கிரஸ்கட்சி சார்பில் காமராஜர் பிறந்தநாள் விழா கொண்டாட்டம்

புதுக்கோட்டை, ஜூலை.16-
புதுக்கோட்டை நகரில் காங்கிரஸ் கட்சி சார்பில் முன்னாள் முதல்வர் காமராஜர் பிறந்தநாள் விழா கொண்டாடப்பட்டது.



புதுக்கோட்டை மாவட்ட காங்கிரஸ் கட்சியின் சார்பில் முன்னாள் தமிழக முதல்வர் காமராஜரின் பிறந்த நாள் விழா மாவட்ட தலைவர் முருகேசன் தலைமையில் முன்னாள் நகர்மன்ற தலைவர் துரை. திவியநாதன், மாநில பொதுக்குழு உறுப்பினர் வழக்கறிஞர் சந்திரசேகரன், மாநில சிறுபான்மை பிரிவு துணை தலைவர் இப்றாஹீம் பாபு, வட்டார தலைவர் சூர்யா பழனியப்பன், நகர தலைவர் மதன் ஜுவல்லரி கண்ணன் ஆகியோர் முன்னிலையில் சிறப்பாக கொண்டாடப்பட்டது.

புதுக்கோட்டை காமராஜபுரத்தில் உள்ள காமராஜர் திருவுருவ சிலைக்கும் புதுக்கோட்டை நாடார் சமூகத்தினர் திருமண மண்டபத்தில் உள்ள காமராஜர் திருவுருவ சிலைக்கும் புதுக்கோட்டை மாவட்ட காங்கிரஸ் கட்சியின் அலுவலகத்தில் உள்ள காமராஜர் அவர்களின் திருவுருவ படத்திற்கும் புதுக்கோட்டை வட்டாரம் திருமலைராய ஊராட்சி மேட்டுப்பட்டி இந்திரா நகரில் அமைக்கப்பட்ட திருவுருவ படத்திற்கும் மாலை அணிவித்து மரியாதை செய்யப்பட்டது. இந்திரா நகரில் காங்கிரஸ் பேரியக்கத்தின் கொடியினை முன்னாள் நகர் மன்ற தலைவர் துரை. திவியநாதன் ஏற்றினார் பின்னர் அனைவருக்கும் இனிப்புகள் வழங்கப்பட்டது.

நிகழ்ச்சியில் கவுன்சிலர் வேங்கை அருணாசலம் காட்டூர் ஊராட்சி மன்ற முன்னாள் தலைவர் செம்பை மணி. செம ராஜா முகமது குட்லக் எம்.ஏ.எம் தீன், முகமது மீரா, விவசாய பிரிவு தனபதி, முன்னாள் நகர தலைவர் மேப்ஸ் வீரையா, ஜம்புலிங்கம், ஒன்றிய கவுன்சிலர் துரைக்கண்ணன், திருக்கட்டளை ஊராட்சி மன்ற தலைவர் ஜெயபால், வட்டார தலைவர் ஜெய்சங்கர், சிவக்குமார், அருள் முருகன், மேட்டுப்பட்டி கணேசன், நாராயணன், ரெங்கசாமி, சேங்கத்தோப்பு ஆறுமுகம், சந்தை செந்தில், சதீஷ், முத்துவிஜயன், அடைக்கலம், மக்கள் கோபால் டிரைவர் சிவா, மாவட்ட மகிளா காங்கிரஸ் தலைவர் கவுரி, நிர்வாகிகள் சிவந்தி, இந்திரா உள்பட ஏராளமான காங்கிரஸ் கட்சியினர் கலந்துகொண்டனர்

# அரியலூர் அரசு மேல்நிலைப் பள்ளியில் கல்வி வளர்ச்சி நாள் விழா

அரியலூர், ஜூலை. 16-
அரியலூர் அரசு மேல்நிலைப் பள்ளியில் கல்வி வளர்ச்சி நாள் விழா நடைபெற்றது.

தமிழக முன்னாள் முதல்வர் காமராஜர் பிறந்த நாள் விழாவை முன்னிட்டு, அரியலூர் அரசு மேல்நிலைப்பள்ளி திடலில் நடைபெற்ற, கல்வி வளர்ச்சி நாள் விழாவுக்கு, பள்ளியின் தலைமை ஆசிரியர் சரவணன் தலைமை வகித்தார். உதவி தலைமை ஆசிரியர் வேலுசாமி வரவேற்றார்.



பள்ளி மாணவ மாணவிகளுக்கு நடைபெற்ற கவிதை போட்டி கட்டுரை போட்டி பேச்சுப்போட்டி ஓவிய போட்டி உள்ளிட்ட போட்டியில் முதல் மூன்று இடங்களை பெற்ற மாணவ மாணவர்களுக்கு அரியலூர் துணை தாசில்தார் சரவணன் பரிசுகளை வழங்கி பேசினார். இந்நிகழ்ச்சியில் நிகழ்ச்சி ஒருங்கிணைப்பாளர் ரமேஷ் ஆசிரியர், ஆசிரியைகள் சாந்தி மாலதி உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

# கந்தர்வகோட்டை அருகே உள்ள அரசு பள்ளியில் காமராஜர் பிறந்தநாள் விழா

கந்தர்வகோட்டை, ஜூலை.16-
புதுக்கோட்டை மாவட்டம் கந்தர்வகோட்டை ஊராட்சி ஒன்றிய குருவாண்டான் தெரு தொடக்கப் பள்ளியில் கல்வி காவலர் முன்னாள் முதல்வர் காமராஜரின் 121 வது பிறந்த நாளை ஒட்டி பள்ளி மாணவ மாணவிகளுக்கு போட்டிகள் நடத்தப்பட்டு பரிசுகள் வழங்கப்பட்டது.

பள்ளி குழந்தைகளுக்கு இனிப்பு வழங்கி மாலை அணிவித்து காமராஜரின்



121 வது பிறந்த நாளை ஒட்டி அவரின் புகழை நினைவு கூறும் வகையில் பள்ளி தலைமை ஆசிரியர் மீனா பேசினார், இதில் பள்ளி மாணவ மாணவிகள் மற்றும் பெற்றோர்கள் ஆசிரியர்கள் கலந்து கொண்டனர்.

# புதுக்கோட்டை மௌண்ட்சீயோன் மெட்ரிக் பள்ளியில் காமராஜரின் பிறந்தநாள் விழா கொண்டாட்டம்



புதுக்கோட்டை, ஜூலை.16-
புதுக்கோட்டை மௌண்ட் சீயோன் மெட்ரிக் மேல்நிலைப் பள்ளியில் காமராஜரின் பிறந்தநாள் விழா "கல்வி வளர்ச்சி" நாளாகக் கொண்டாடப் பட்டது.

இவ்விழாவில் பள்ளியின் கல்வி முதல்வர் குமரேஷ், காமராஜர் பற்றிய முக்கிய குறிப்புகளை வழங்கினார். பள்ளியின் நிர்வாக முதல்வர் கிருபா ஜெபராஜ் நிகழ்ச்சிக்குத் தலைமை தாங்கினார்.

பள்ளியின் கல்வி முதல்வர் பேசுகையில், கர்மவீரர் காமராஜர் குழந்தைகள் கல்விகற்க வேண்டும் என்ற உன்னத நோக்கத்தோடு வாழ்ந்த அவருடைய அர்ப்பணிப்பு உணர்வே அனைத்து தரப்பு மக்களிடமும் பாராட்டையும், நன் மதிப்பையும் பெற்றுத் தந்தது என கூறினார்.

நிகழ்ச்சியைத் தொடர்ந்து, மாணவர்கள் தமிழ் மற்றும் ஆங்கிலத் தில்கர் மவீரர் காமராஜர் பற்றிய பேச்சுப்போட்டியினை அரங்கேற்றியும், பாடல் பாடியும், விழாவைச் சிறப்பித்தனர். நிகழ்ச்சியில் காமராஜர் வரலாறு பற்றிய குறும்படம் மாணவர்களுக்கு ஒளிபரப்பப்பட்டது. காமராஜரின் திருவுருவப் படத்திற்கு பள்ளி முதல்வர்கள் மாலை அணிவித்து மலர் அஞ்சலி செலுத்தினர்.

# அசோக் நகர் பள்ளியில் கல்வி வளர்ச்சி நாள் விழா

புதுக்கோட்டை, ஜூலை. 16-
புதுக்கோட்டை அசோக்நகர் நடுநிலைப் பள்ளியில் காமராஜர் பிறந்த நாளை கல்வி வளர்ச்சி நாள் விழாவாக கொண்டாடப்பட்டது. விழாவில் தலைமை ஆசிரியர் நிர்மலா தலைமையேற்றார்.

பட்டதாரி ஆசிரியர் பழனிச்சாமி வரவேற்புரையாற்றினார். விழாவில் மாணவர்களுக்கு பேச்சுப்போட்டி கட்டுரை போட்டி மற்றும் ஓவியப்போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு பரிசுகள் வழங்கப்பட்டன.

பெற்றோர்கள் நாராயணசாமி உள்பட பலர் வாழ்த்துரை



வழங்கினார்கள். மாணவர்களுடைய கலை நிகழ்ச்சிகள் சிறப்பாக நடைபெற்றது. விழாவில் மாணவர்கள் பெற்றோர்கள் பள்ளி மேலாண்மை குழு உறுப்பினர்கள் ஆசிரியர்கள் சத்துணவு பணியாளர்கள் மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டனர். விழா ஏற்பாடுகளை ஆசிரியர்கள் ஜீனத்துனிஷா பேகம், சமீபானு, அனுபமா, கஸ்தூரி, அனுசியா, சத்யா ஜெஸைட்டா ஆகியோர் செய்திருந்தனர்.



புதுக்கோட்டை கிரவுண்ட் சிட்டி ரோட்டரி சங்கத்தின் 24 ஆம் ஆண்டு பதவியேற்பு விழா நேற்று நடைபெற்றது. தலைவராக செந்தில்குமார், செயலாளராக சோலைமணி, பொருளாளராக நடனம் ஆகியோர் பதவி ஏற்று கொண்டனர். வருங்கால ஆளுநர் ராஜா கோவிந்தசாமி சிறப்பு விருந்தினராக கலந்துக்கொண்டு பதவியேற்பு செய்து வைத்தார். விழாவில் மண்டல ஒருங்கிணைப்பாளர் ஆரோக்கியசாமி, துணை ஆளுநர் கவிதா ராஜசேகர், உடனடி முன்னாள் தலைவர் செந்தில் கணேஷ், செயலாளர் தங்கதுரை உள்ளிட்ட பலர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

# தமிழ்நாடு நாடார் உறவின் முறைகள் கூட்டமைப்பின் சார்பில் காமராஜர் பிறந்தநாள் விழா



தென்காசி ஜூலை 16
தமிழ்நாடு நாடார் உறவின் முறைகள் கூட்டமைப்பின் சார்பில் தென்காசி மாவட்டம் குத்துக்கல் வலசையில் அமைந்துள்ள பெருந்தலைவர் காமராஜரின் 121 வது பிறந்த நாளை முன்னிட்டு காமராஜருடைய திரு உருவச்சிலைக்கு தமிழ்நாடு நாடார் உறவின்முறைகள் கூட்டமைப்பின் நிறுவன தலைவர் அகரக்கட்டு லூர்து நாடார் தலைமையில் மாலை அணிவித்து மலர் தூவி மரியாதை செலுத்தி இனிப்புகள் வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் பொருளாளர் சுப்பிரமணியன் தென்காசி மாவட்ட துணை தலைவர் திருமலை குமார் இந்த நாடார் வாலிபர் சங்க துணை தலைவர் ராம்குமார் செயலாளர் முருகேசன் மற்றும் நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர். முடிவில் சுப்பிரமணியன் அனைவருக்கும் நன்றி கூறினார்.

# காந்திநகர் நகராட்சி தொடக்கப்பள்ளியில் கல்வி வளர்ச்சி நாள் கொண்டாட்டம்



புதுக்கோட்டை, ஜூலை. 16-
முன்னாள் தமிழ்நாடு முதலமைச்சர் பெருந்தலைவர் காமராசரின் பிறந்த நாளான நேற்று கல்வி வளர்ச்சி நாளாக கொண்டாடப்பட்டது. விழாவிற்கு பள்ளியின் தலைமையாசிரியர் மங்கையர்கரசி தலைமை வகித்தார். சிறப்பு விருந்தினராக அம்பிகா கல்வி அறக்கட்டளையின் நிறுவனத் தலைவர் சந்திரா ரவிந்திரன் கலந்து கொண்டு சிறப்புரையாற்றி போட்டிகளில் வெற்றிபெற்ற மாணவ மாணவிகளுக்கு பரிசுகள் வழங்கி சிறப்பித்தார்.

நிகழ்வில் பெற்றோர் ஆசிரியர் சங்க தலைவர் இராமு.தர்மராஜ், கல்விசார் சமூக ஆர்வலர் குட்டிச்சாமி, மற்றும் அம்பேத்கர் நற்பணி மன்ற பொருப்பாளர்கள் வழக்கறிஞர் ஜெகன், இதயம் முரளி, சமூக செயற்பாட்டாளர் கலியுக மெய்யர்,கார்த்திக், பாலா, யுவராஜ், நித்திஸ், பவித், அஜித், சூர்யா, மற்றும் பள்ளியில் காமராஜர் போன்று வேடம் அணிந்து பல்வேறு கலைநிகழ்ச்சிகளை மாணவர்கள் அரங்கேற்றினர்.

# 'வீட்டிற்கோர் புத்தகச்சாலை' என்பது மெய்ப்பட உழைப்போம் முதல்வர் மு.க.ஸ்டாலின்

சென்னை, ஜூலை. 16-
காமராஜர் பிறந்தநாளில், 'வீட்டிற்கோர் புத்தகச்சாலை' என்று அண்ணா சொன்னது மெய்ப்பட உழைப்போம் என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.



பெருந்தலைவர் காமராசர் பிறந்த நாளான கல்வி வளர்ச்சி நாளையொட்டி முதல்வர் மு.க.ஸ்டாலின் தனது ட்விட்டர் பக்கத்தில் வெளியிட்டுள்ள பதிவில், "கல்விக் கண் திறந்த பெருந்தலைவர் காமராஜரின் 121வது பிறந்தநாளான இன்று,{ஜூலை 15} நங்கநல்லூர் நேரு அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளியில் நடைபெற்ற கல்வி வளர்ச்சி நாள் விழாவில் பங்கேற்று, அவரது புகழைப் போற்றினேன்.

அறிவியக்கமாம் திராவிட முன்னேற்றக் கழகத்தின் செயல் தலைவராக 2017-இல் பொறுப்பேற்றது முதல், என்னைச் சந்திக்க வருபவர்கள் பூங்கொத்துகளையும் பொன்னாடைகளையும் தவிர்த்து, புத்தகங்களை அளித்திடச் சொல்லியிருந்தேன். அதன்படி என்னை வந்தடைந்த புத்தகங்களில் ஒன்றரை இலட்சம் புத்தகங்களை தமிழகத்தின் பல்வேறு நூலகங்களுக்கும், என்னிடம் புத்தகங்கள் வேண்டி கடிதம் எழுதியவர்களுக்கும் அளித்துள்ளேன்.

அதன் தொடர்ச்சியாக, பெருந்தலைவர் காமராஜர் பிறந்தநாளில், கருணாநிதி அறிவித்த கல்வி வளர்ச்சி நாளில் 7740 புத்தகங்களைப் பொது நூலகத்துறைக்கு வழங்கினேன். பெருந்தலைவர் காமராஜர் பிறந்தநாள் - கலைஞர் நூற்றாண்டு நூலகத் திறப்பு நாள் என இந்நாளில், 'வீட்டிற்கோர் புத்தகச்சாலை' என்று பேரறிஞர் அண்ணா சொன்னது மெய்ப்பட உழைப்போம்!" இவ்வாறு அதில் கூறியுள்ளார்.

# புதுகைத் தென்றல் இதழாளருக்கு முத்து விழா பாராட்டு

புதுக்கோட்டை, ஜூலை. 16-
"புதுகைத் தென்றல்" மாத இதழின் ஆசிரியர் புதுகை மு. தருமராஜனின் -80வது அகவை நிறைவு-முத்து விழாவை, புதுக்கோட்டை மாவட்ட இலக்கிய, சமூக ஆர்வலர்கள் மற்றும் நண்பர்கள் இணைந்து, தமிழ்நாடு அறிவியல் இயக்க அரங்கில் சிறப்பாகக் கொண்டாடினர்.



விழாவிற்கு பொன்மாரிக் கல்வி நிறுவனங்களின் தலைவர் மருத்துவர் ச.ராம்தாஸ் தலைமை வகித்தார். கவிஞர் நிலவைப் பழனியப்பன் வாழ்த்துப்பா பாடினார். வெங்கடேஸ்வரா கல்வி நிறுவனங்களின் தாளாளர் ஆர்.எம்.வி.கதிரேசன் தொடக்கவுரை ஆற்றினார். உலகத் திருக்குறள் பேரவைத் துணைத் தலைவர் முனைவர் மு.பாலசுப்பிரமணியன், கம்பன் கழக செயலாளர் ரா.சம்பத்குமார், வெங்கடேஸ்வரா மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி தாளாளர் கவிஞர். தங்கம்மூர்த்தி,

புலவர் துரை.மதிவாணன், எஸ்.ஆரோக்கியசாமி, திருக்குறள் கழகத் தலைவர் க. இராமையா, எழுத்தாளர் அன்டனூர் சுரா ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். அனைவரும் தங்கள் வாழ்த்துரையில் "புதுகைத் தென்றல்" மாத இதழ் 20 ஆண்டுகளுக்கு மேலாக தொடர்ச்சியாக, இடைநில்லாமல், வந்து கொண்டிருக்கிறது. தான் பிறந்த புதுக்கோட்டை மண்ணின் மீது உள்ள பற்றின் காரணமாக தான் நடத்தும் மாத இதழுக்கு "புதுகைத்தென்றல்" என்ற பெயர் சூட்டி இருக்கிறார். தன் துணைவியார் பேரா.பானுமதி தருமராஜன், சத்தியராம் ராமுக்கண்ணு உட்பட பலரை எழுத்தாளராக்கிய பெருமை புதுகை தருமராஜனுக்கு உண்டு. அதேபோல் புதுகைத் தென்றலில் புதுக்கோட்டை மாவட்ட எழுத்தாளர்களுக்கு முன்னுரிமை தரும் மரபை தொடர்ந்து கடைபிடிக்கிறார்.

காமராஜரின் பேரில் உள்ள பற்றின் காரணமாக தன் வாழ்க்கையை நேர்மையாக அமைத்துக் கொண்டவர். பேரா. பானுமதி தருமராஜன் "வரலாறு படைத்த வைரமங்கையர்" கட்டுரைகள் மூலம் இந்தியச் சுதந்திரத்திற்கு, சமூக முன்னேற்றத்திற்கு பாடுபட்ட அறிந்த, அறியப்படாத பெண்களை வெளிச்சத்திற்கு கொண்டுவந்துள்ளார். இருவரும் பல்லாண்டுகள் வாழ்ந்து தமிழ்ச் சமூகத்திற்கு தொடர்ந்து தொண்டாற்ற வேண்டும் என்று கேட்டுக்கொண்டனர். விழா நாயகர்கள் பானுமதி தருமராஜன், புதுகைத்தென்றல் மு.தருமராஜன் இருவரும் ஏற்புரை வழங்கினர்.

விழாவில், மேனாள் வர்த்தக சங்கத் தலைவர் ஆர்.சேவியர், ந.புண்ணியமூர்த்தி, எஸ். சுதந்திரராஜன், கோ.ச.தனபதி, கவி.முருகபாரதி, புதுகைப் புதல்வன், பீர்முகமது மற்றும் ஏராளமானோர் பங்கேற்று வாழ்த்தினர். முன்னதாக உலகத் திருக்குறள் பேரவை செயலாளரும் நிகழ்ச்சி ஒருங்கிணைப்பாளருமான சத்தியராம் ராமுக்கண்ணு விழாவிற்கு வருகை தந்த அனைவரையும் வரவேற்றார். நிறைவாக உலகத் திருக்குறள் பேரவை துணைச் செயலர் ச.கண்ணன் வருகை தந்த அனைவருக்கும் நன்றி கூறினார். விழா நிகழ்வுகளை உலகத் திருக்குறள் பேரவை துணைச் செயலர் கு.ம.திருப்பதி மற்றும் வாசகர் பேரவை செயலர் சா.விஸ்வநாதன் இருவரும் தொகுத்து வழங்கினர்.

# அரிமளம் தெற்கு வட்டாரத்தில் பெருந்தலைவர் காமராஜ் பிறந்தநாள் விழா

புதுக்கோட்டை, ஜூலை. 16-
புதுக்கோட்டை மாவட்டம் அரிமளம் தெற்கு வட்டார காங்கிரஸ் கமிட்டி சார்பாக கல்வி கண் திறந்த காமராஜர் பிறந்தநாள் விழா தெற்கு வட்டார காங்கிரஸ் தலைவர் எம் எம் கணேசன் தலைமையில் நடைபெற்றது மற்றும் கே புதுப்பட்டி கீழாநிலைக்கோட்டை திரு உருவ சிலைக்கு திரு உருவப்படத்திற்கும் தெற்கு வட்டார காங்கிரஸ் தலைவர் எம் எம் கணேசன் மாலை அணிவித்தார்.



கட்சி நிர்வாகிகள் நகரத் தலைவர் முத்தையா, ஜெயலட்சுமி, முன்னாள் சேர்மன் ராஜகுமாரி, வட்டார மகளிர் அணி தலைவி வெற்றி செல்வம், முருகன், பெரியசாமி கிராம காங்கிரஸ் கமிட்டி தலைவர், கப்பல் முருகன், புது நிலை வயல் காங்கிரஸ் தலைவர் சக்தி வடிவேலன், இளைஞர் அணி வெள்ளச்சி, சீனி, அஞ்சம்மாள், ராஜாமணி, செல்வி, ஹரிஷ் மற்றும் கட்சி உறுப்பினர்கள் பொதுமக்கள் சிறப்பாக கலந்து கொண்டனர். தெற்கு வட்டார தலைவர் அனைவருக்கும் இனிப்பு சர்க்கரை பொங்கல் வழங்கினார்.


# மணிப்பூர் பற்றி எரிவதை ஐரோப்பிய யூனியன் விவாதிக்கிறது பிரான்ஸ் தேசிய தினத்தில் பங்கேற்க டிக்கெட் பிரதமர் மோடி மீது ராகுல் தாக்கு

புதுடெல்லி, ஜூலை. 16-
மணிப்பூர் விவகாரம் பற்றி ஐரோப்பிய யூனியன் நாடாளுமன்றத்தில் விவாதிக்கப்பட்டது குறித்து பிரதமர் மோடி மீது ராகுல் காந்தி புதிய விமர்சனத் தாக்குதல் தொடுத்துள்ளார்.

இதுகுறித்து காங்கிரஸ் முக்கியத் தலைவர் ராகுல் காந்தி தனது ட்விட்டர் பக்கத்தில் நேற்று வெளியிட்டுள்ள பதிவில், "மணிப்பூர் பற்றி எரிகிறது. ஐரோப்பிய யூனியன் நாடாளுமன்றத்தில் இந்தியாவின் உள்நாட்டு விவகாரம் பற்றி விவாதிக்கப்படுகிறது. இதுவரை பிரதமர் ஒரு வார்த்தை கூட பேசவில்லை. இதற்கிடையில், ரஃபேல் அவருக்கு பிரான்ஸ் தேசிய தினத்தில் பங்கேற்க டிக்கெட் பெற்றுத் தந்துள்ளது" என்று தெரிவித்துள்ளார்.

முன்னதாக, பிரதமர் மோடி பிரான்ஸ் அதிபரின் அழைப்பை ஏற்று வியாழக்கிழமை அந்நாட்டிற்குச் சென்றார். அங்கு பிரதமர் மோடிக்கு, பிரான்ஸ் அதிபர் இம்மானுவேல் மேக்ரன், தங்கள் நாட்டின் உயரிய விருதான கிராண்ட் கிராஸ் ஆஃப் தி லீஜியன் ஆஃப் ஹானர் விருதை வழங்கி கவுரவித்தார். வெள்ளிக்கிழமை அந்நாட்டின் தேசிய தின கொண்டாட்டத்தில் மோடி சிறப்பு விருந்தினராகப் பங்கேற்றார்.

இதுகுறித்து பிரதமர் மோடி ட்விட்டர் பதிவொன்றில், "இந்த பிரான்ஸ் பயணம் மறக்க முடியாத ஒன்று. பிரான்ஸின் தேசிய தினத்தில் பங்கேற்க வாய்ப்பு கிடைத்தது இந்த பயணத்தை இன்னும் சிறப்பாக்கியது. அங்கு நடந்த அணிவகுப்பில் இந்திய அணி பங்கேற்று பெருமை சேர்த்தது சிறப்பாக இருந்தது. சிறப்பான வரவேற்பு மற்றும் விருந்தோம்பலுக்காக பிரான்ஸ் அதிபர் இம்மானுவேல் மேக்ரனுக்கும், பிரெஞ்சு



மக்களுக்கும் நான் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். இந்தியா - பிரான்ஸ் உறவு தொடரும்" என்று தெரிவித்திருந்தார்.

பிரதமரின் இந்தப் பயணத்தின்போது இந்திய கடற்படையின் ஐஎன்எஸ் விக்ராந்த் விமானம் தாங்கி கப்பலுக்காக 26 ரஃபேல்-எம் போர் விமானங்கள் வாங்க ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டது.

பிரதமரின் இந்த வருகைக்கு முன்பாக, ஐரோப்பிய யூனியன் நாடாளுமன்றம் மணிப்பூர் வன்முறையை கட்டுப்படுத்த இந்திய அரசு முயற்சி எடுக்க வேண்டும் என்று தீர்மானம் நிறைவேற்றி இருந்தது. இதற்கு கண்டனம் தெரிவித்திருந்த இந்திய அரசு, மணிப்பூர் குறித்து ஐரோப்பிய யூனியன் தீர்மானம் நிறைவேற்றி இருப்பது அதன் காலனியாதிக்க மனநிலையைக் காட்டுகிறது என்று கூறியிருந்தது.

இந்த நிலையில், ராகுல் காந்தியின் ட்வீட்டுக்கு, "ராகுல் காந்தியின் லண்டன் பயணத்துக்குப்பிறகு,மணிப்பூர் விவகாரத்தை ஐரோப்பிய யூனியன் நாடாளுமன்றம் கையிலெடுத்திருப்பது தற்செயலானது இல்லை" என்று பாஜக பதிலடி தந்துள்ளது.

பாஜகவின் தகவல் தொழில்நுட்ப பிரிவு ஒருங்கிணைப்பாளர் அமித் மாளவியா, "லண்டன் சென்ற ராகுல் காந்தி இந்தியாவின் உள்நாட்டு விவகாரங்களில் ஐரோப்பா தலையிட வேண்டும் என்று கோருகிறார். பின்னர் மணிப்பூரின் துரதிர்ஷ்டவசமான வன்முறையை அரசியலாக்குகிறார். இந்த காங்கிரஸ் பாரம்பர்யம் மணிப்பூருக்குச் செல்கிறது, அடுத்து ஒரு வெளிநாட்டு சக்தி இந்தியாவின் உள்நாட்டு விவகாரத்தில் தீர்ப்பளிக்க விரும்புகிறது. இதில் சுவாரஸ்யம் என்னவென்றால், ஐரோப்பிய யூனியனில் பாரிஸின் சமீபத்திய கலவரம் பற்றி எந்த விவாதமும் நடத்தப்படவில்லை" என்று தெரிவித்துள்ளார்.

இனக் கலவரத்தால் பாதிக்கப்பட்டுள்ள மணிப்பூருக்கு ஜூன் 29-ம் தேதி ராகுல் காந்தி நேரில் சென்றிருந்தார். தனது பயணம் குறித்த ட்விட்டர் பதிவில், "மணிப்பூரின் நிலைமை சரியாக அமைதி தேவை. எனது இரண்டு நாள் பயணத்தில் துயரத்தில் இருக்கும் நம் சகோதர சகோதரிகளின் நிலை என் இதயத்தை நொறுக்கியது. அமைதி ஒன்றே முன்னேறுவதற்கான ஒரே வழி. நாம் அனைவரும் அதை நோக்கி பணியாற்ற வேண்டும்" என்று கூறியிருந்தது குறிப்பிடத்தக்கது.

# தென்காசியில் 6 லட்சம் மதிப்பில் புதிய குடிநீர் தொட்டி திறப்பு விழா

தென்காசி ஜூலை 16
தென்காசி கீழ்பகுதி திருவள்ளுவர் சமுதாய மக்கள் வாழும் 23 வது வார்டுமுப்புடாதி அம்மன் கோவில் தெரு பகுதி மக்களின் நீண்ட நாள் கோரிக்கையான குடிநீர் நீர்த்தேக்க தொட்டி 6 லட்சம் மதிப்பீட்டில் ஆள் துளை கிணறு மேல்நிலை நீர் தீர்க்கதொட்டி கட்டிட திறப்பு விழா நடைபெற்றது. இந்நிகழ்ச்சிக்கு தென்காசி நகராட்சி சேர்மன் சாதிர் தலைமை வகித்து குடிநீர் மேல்நிலை நீர்தேக்க தொட்டியினை திறந்து வைத்தார். தென்காசி நகர காங்கிரஸ் தலைவர் மாடசாமி ஜோதிடர் துணை சேர்மன் சுப்பையா 23வது வார்டு கவுன்சிலர் சுனிதா ஆகியோர் முன்னிலை வகித்தனர். இந் நிகழ்ச்சியில்



ஆணையாளர் பாலமுருகன் பொறியாளர் கண்ணன் கவுன்சிலர்கள் பூமாதேவி, ரபிக், சுப்பிரமணியன் காங்கிரஸ் நிர்வாகிகள் மாவட்ட பொதுச் செயலாளர் ஏ ஜி எம். கணேசன் பொருளாளர் ஈஸ்வரன் துணைத் தலைவர் தேவராஜன் பிரேம் குமார் திமுக நிர்வாகிகள் ஷேக்பரீத் தங்கப்பாண்டியன்


சன் ராஜா ராஜேந்திரன் மைதீன் மதிமுக மாவட்ட அவை தலைவர் வெங்கடேஸ்வரன் கார்த்திக் திருவள்ளுவர் சமுதாய நிர்வாகிகள் சுப்பையா சுதர்சன் ராமச்சந்திரன் சிதம்பர ராஜா ராமலிங்கம் துரை கிருஷ்ண மூர்த்தி ரவி குமார் சபரிகணேஷ் மகாகாளிதாஸ் விவேக் ராஜா விக்னேஷ் வெங்கடேஷ் செல்வநாயகம் அரவிந்த் ஜோதிடர் சுரேஷ் கோபி கவாஸ்கரன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர் முடிவில் காங்கிரஸ் நகர தலைவர் மாடசாமி ஜோதிடர் அனைவருக்கும் நன்றி கூறினார்.

PUDUGAI VARALARU - National Tamil Daily : Published by S.Sivasakthivel at Plot No.1103,Periyar Nagar, Rajagopalapuram Post,Pudukkottai-622003,TamilNadu State and Printed at V.C Printograph, 144,M.K Kottai Road, Elumalaiyan Rice Mill Complex, Ambigapuram, Ariyamangalam, Tiruchirappalli-620010, TamilNadu State. Editor: S.Sivasakthivel, Phone : 04322-261577, E.Mail: pudugaivaralaru@gmail.com.



# மணிப்பூர் பற்றி எரிவதை ஐரோப்பிய யூனியன் விவாதிக்கிறது : பிரதமர் மீது ராகுல் சாடல்

# இந்திய ரூபாயை பொது நாணயமாக பயன்படுத்த இலங்கை ஆலோசனை





# 2026-க்குள் தென் மாவட்டத்தை சேர்ந்த 6 ஆயிரம் இளைஞர்களுக்கு வேலை


| சென்னை / புதுக்கோட்டை | 16.07.2023 | varalaruu.com | பக்கம்:4 | ரூ.10 |
|---|---|---|---|---|

புதுகை
வரலாறு
நாளிதழ்

புதுகை

# வரலாற்றில் இன்று



## இன்றைய பிறந்த நாள்

அருணா ஆசஃப் அலி , இந்திய விடுதலை இயக்கத் தன்னார்வலர் (பி.1909) (இ.1996)



வெங்கட்ராமன் சுப்ரமணியம் , இந்திய-ஆத்திரேலியத் துடுப்பாளர் (பி.1936)



சிவகங்கை இராசேந்திரன் , இந்தி எதிர்ப்புப் போராளி (பி.1947) (இ.1965)



தன்ராஜ் பிள்ளை , இந்திய வளைதடிப் பந்தாட்ட வீரர் (பி.1968)



லாரி சாங்கர் , அமெரிக்க மெய்யியலாளர், விக்கிப்பீடியா நிறுவனர்களில் ஒருவர் (பி.1968)



## இன்றைய நினைவு நாள்

டி. கே. பட்டம்மாள் , கருநாடக இசைப் பாடகி (பி.1919) (இ.2009)



பருண் டே , இந்திய வரலாற்றாய்வாளர், கல்வியாளர் (பி.1932) (இ.2013)

